Free Circulation Germany- England
மணி: 75 - ஓசை: 347 ஆவணி. August 2025

**Orientalisch**
**Textilien & Schmuck**

தரமும், மலிவும், ஒரே இடத்தில்
35 Anniversary
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
31 TH years IN EUROPE
Successful Publishing
பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் B.F.A

# தமிழ் இனத்தின் அடையாளங்கள் அனைத்தும் திட்டமிட்டு பறிக்கப்பட்டு வரும் ஆபத்து

கொழும்பிலிருந்து... என்.அசோக்



**பகலில் குட்டித்தூக்கம் நல்லதா**

Dr.IN

எம்மினத்தின் மாபெரும் கலைஞனுக்கு எமது அஞ்சலி

மிருதங்கவித்துவான் சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன்

இதழ்: 347

31 ஆண்டுகளாக தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கும் வெற்றிமணி






# கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்

காலை ஐந்து மணிக்கே ஊர் எழும்பிவிட்டது. பெரிசுகள் நான்கு மணிக்கே எழும்பிவிடு வார்கள். நான் இங்கு குறுப்பிட்ட ஊர் என்பது இளசுகளின் ஊரைக்குறிக்கும். 1965 ம் ஆண்டு எனக்கு அப்போ 13 வயசு. வானொலியில் காலைச் செய்திக்கு காது கொடுக்காமல் வழமையாக பெருசுகள் காலைக்கடன்களே முடிக்காதுகள். அந்தப்பட்டியலில் இன்று இளசுகள் காதுகொடுத்து நிற்கிறார்கள்.

நேற்றைய வீரகேசரி, ஈழநாடு பத்திரிகைகளில் நாளை மக்கள் திலகம் எம். ஜி. ஆரும் கன்னடத்து பைங்கிளி சரோஜாதேவி பலாலி விமான நிலையத் தில் கொழும்பில் இருந்து வந்து இறங்குவார்கள் என்று போட்டு இருந்தது.


1965 ஐப்பசி மாதம் மட்டுநகருக்கு வந்தபோது

நான் பாலும் பழமும் பார்த்ததில் இருந்து தீவிர சிவாஜி இரசிகன்.நான் பேச நினைப்பதெல்லாம் நீபேச வேண்டும் பாடலில் சரோஜாதேவியையும் பிடிச்சுபோச்சு. எம். ஜி.ஆர் உடன் சரோஜாதேவி யும் வருகிறா என்றதும் ஒரு எரிச்சல் வந்தாலும், சரோஜாதே வியைப்பார்க்க பனைவடலி,சுடலை என்று இரண்டு பாச்சலில் கடந்து பிளேன் இறங்கும் தளத்திற்கே எனது நண்பர்களுடன் சென்றுவிட்டேன்.

(அவர்களில் பலர் எம். ஜி.ஆர் இரசி கர்கள்.) எமது ஊரில் இருந்து மூன்று கூப்பிடுதூரம் பாலாலி விமான நிலையம். எமக்கு விமான நிலையம் அத்துபடி. எப்படி என்று கேட்கி றீர்களா? எமது ஊரில் பலர் சைக்கிள் ஓடப்பழகவே Ranway க்குதான் போவோம். மிகப்பெரிய நீண்ட ஓடுதளம் (ranway) அதில் மூளாய் பருத்தித்துறை வீதி எமது ஊருக்கும் (குரும்பசிட்டி) விமானம் ஓடுதளத்திற் கும் நடுவாலை போககிறது. தெரு வோரம் உள்ள ஓடுதளத்தின் முடிவு இடம் பாவனையில் இல்லை. அதே நேரம் பாவனையில் உள்ள இடத்தி ற்கும்




15 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 347



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# தமிழ் இனத்தின் அடையாளங்கள் அனைத்தும் திட்டமிட்டு பறிக்கப்பட்டு வரும் ஆபத்து

கொழும்பிலிருந்து...
**என்.அசோக்**

**2009** இல் நடந்த முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்து 16 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த 16 ஆண்டுகளில் ஈழத்தமிழர்கள் எதிர் கொண்ட சவால்கள்,போராட்டங்கள் ஏராளம்.யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் நிலத்துக்கான போராட்டம், முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த மனித



உரிமை மீறல்களுக்கான போராட்டம், கலை-கலாசார-பண்பாட்டுக்கான போராட்டம், மரணித்த தங்களது உறவுகளை நினைவேந்துவதற்கான போராட்டம் என ஈழத்தமிழர்களுடைய கடந்த 16 ஆண்டுகள் போராட்டத்துடனேயே கழிந்திருக்கிறது.

அதில் குறிப்பாக முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்களுக்கான நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுவந்த பல உறவுகள் மரணித்திருக்கிறார்கள். சில உறவுகள் சர்வதேசத்தின் மீதான நம்பிக்கையை இழந்து போராட்ட களத்திலிருந்து ஒதுங்கியிருக்கிறார்கள்.ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகள் சர்வதேச அரங்கின் பார்வையில் 2012 ஆம் ஆண்டில் வந்த காலம் முதல் அதன் மீது நம்பிக்கை வைத்த உறவுகள் இன்று அதன்மீதும் நம்பிக்கையிழந்து வருகிறார்கள்.

ஈழத்தமிழர்கள் ஜெனீவாவை 2012 ஆம் ஆண்டில் நாடியவேளையில், பெரும் நம்பிக்கை தமிழ் மக்களிடத்தில் இருந்தது. 2012 ஆம் ஆண்டு 30/1 தீர்மானம் அதாவது 'இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம்' தொடர்பாக கொண்டு வரப்பட்ட அந்த தீர்மானம் கடந்த 13 ஆண்டுகளாக தனியே ஒரு பேசுபொருளாக மாத்திரமே இருந்து வருகிறது. 2012 இல் 30/1 தீர்மானம் அதன் பின்னர் 2022 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானம் வரை மனித உரிமை பேரவை அங்கத்துவ நாடுகளினாலேயே சமர்ப்பிக்கப்பட்டு, ஜெனிவா அரங்கில் உறுப்பு நாடுகளிடையே பெரும்பான்மையினரின்



ஆதரவைப் பெற்று நிறைவேற்றப்பட்டாலும் இலங்கையின் அரசாங்கத்தையோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்புகளையோ ஒரு அடிகூட அந்த தீர்மானங்களாலோ மனித உரிமை சபையினாலோ நகர்த்தமுடியவில்லை. 2022 ஆம் ஆண்டு 51/1 தீர்மானம் இங்கிலாந்து, கனடா, மலாவி, மாண்டினீக்ரோ, வடக்கு மாசிடோனியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்டது. 47 நாடுகளில் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் ஜேர்மன் உட்பட 20 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்ததுடன், சீனா, கியூபா மற்றும் பாகிஸ்தான் உட்பட 7 நாடுகள் நிராகரித்திருந்தது. மேலும் இந்தியா உட்பட 20 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது தவிர்த்திருந்தது.

உண்மையில்,ஜெனீவா விவகாரம் கடந்த 13 வருடங்களாக ஒரு பேசுபொருளாக மாத்திரமே இருப்பதற்கான காரணத்தையும் அந்த சபையில் ஈழத்தமிழர்கள் விவகாரம் அடுத்த கட்டத்துக்கு நகராமல் இருப்பதற்கான காரணத்தையும் ஈழத்தமிழ் மக்கள் தெரிந்துகொள்வது அவசியமாகும். நீண்டகாலமாக தன்னுடைய மண்ணுக்காகவும் உரிமைகளுக்காகவும் ஒன்றுதிரண்டு போராடிய ஒரு இனம்,அந்த போராட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டதன் பின்னரும் தங்களுடைய போராட்டத்தை வலிமையுடனும் முன்னர் போராடிய வீரியத்தை இன்னும் இன்னும் அதிகரித்து போராடுவதிலேயே அந்த இனம் போராடியதற்கான காரணம் வலிமை பெறும். ஆனால், ஈழத்தமிழர்களுடைய போராட்ட வரலாற்றை எடுத்துக் கொண்டால் முள்ளிவாய்க்காலுக்கு முன்னர் அவர்களுடைய போராட்டம் வேறொன்றாகவும் முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் வேறொன்றாகவும் இருந்தது.

2009 இற்கு முன்னர் ஈழத்தமிழர்கள் என்ற இனம் சிங்கள அரசுகளிடம் மண்டியிடாத -எதற்கும் துணிந்த ஒரு இனமாகவும் தன்னுடைய இலக்கில் மாத்திரம் கவ னத்தை செலுத்தி வந்திருந்தது.

10 ஆம் பக்கம் பார்க்க...





# நேர்த்தி

"நேர்த்தி" என்ற சொல் தோற்றம், அமைப்பு அல்லது செயல்பாட்டில் உள்ள ஒழுங்கு அல்லது அழகைக் குறித்து நிற்பது. கூடவே, சமயத்தில் நேர்த்திக்கடன் என்பது பக்தர்கள், தம் வேண்டுதல்கள் நிறைவேறிய பின் செலுத்தும் நன்றிக்கடன் என்ற பொருளில் அமைவதும் நாமறிந்ததே.

அண்மையில் கிழக்கிலங்கையில் சமய சடங்குகள் பற்றிய ஒரு கள ஆய்வில் நானும் நண்பர் பத்தவத்சல பாரதியும் ஈடுபட்டிருந்த வேளை ஆய்வுப்பயணத்தில் சந்தித்த நேர்த்தியான ஒரு அனுபவமே இங்கு உங்களுடன் பகிரப்படுகின்றது.

கிராமிய வழிபாட்டில் மக்கள் நேர்த்திக் கடனாக கலையாடும் பூசாரி வேண்டுவன வற்றை அல்லது தமக்கு பிடித்தவற்றை காணிக்கையாக செலுத்துவது வழக்கம் தான். ஆயினும் நேர்த்திக்கடன், படைக்கப்பட்ட நேர்த்தி அழகு அதனை எங்கள் கமராவுக்குள் பதியச் செய்தது .அதுவே உங்களுடன் பகிர வைக்கின்றது. (நான் படம் பிடிக்கும் அதே வேளையில் நண்பர் பாரதி வரிசைக்கிரமமாக எண்ணி 540 bottles என துல்லியமான புள்ளிவிபரக் கணக்கையும் பதிவாக்குவார்.)



பேராசிரியர் என். சண்முகலிங்கன்- யாழ்ப்பாணம்.

# எமக்கு அருகில் அவர் சீட்டு இலக்கம் இருக்கப்படாது எனப் பயணிகள் வேண்டத் தொடங்கினர்

**மாதவி** (யேர்மனி)



அன்றைய மக்கள் குடியைவெறுக்க காரணம் என்ன. திருமணம் என்று சொன்னால் முதல் கேள்வி பையன் எப்படி குடி கிடி இல்லைத்தானே! நண்பர்கள் என்றால் எப்படி அவன் நண்பர்கள் குடி புகை என்று இல்லைத் தானே! இப்படி சேரும் இடம் அவை உச்சம் பெறும். இன்று அவை முற்றாக மறைந்து விட்டன என்று இல்லை, என்றாலும் அன்றுபோல் அவை பெரும் பேசும் பொருளாக இல்லை.

விமானப்பயணம் இன்று குடும்பத் துடன் செல்கின்ற ஒரு திருமணவீடு, அல்லது விருந்தினர் வீடு போல எடுத்துக்கொள்ள வேண்டும். எப்படி நாம் ஒழுக்கமற்ற பண்பாடு அற்ற இடங்களுக்கு பிள்ளைகளை அழைத் தச்செல்வதை தவிர்க்கின்றோமே அதுபோல் விமானப்பயணத்தையும் அங்கு ஒழுக்கமில்லை என்று தவிர்க்க முடியாது.

நமது நாட்டில் இருந்து ஒருவர் கோடைவிடுமுறையைக் கழித்துவிட்டு வெளிநாடு திரும்ப, குடிபோதையில் கையில் தேசிக்காயால் முகத்தை தேய்த்தபடி விமான நிலையத்தில் இருந்தார். வாய்க்குள் கெட்ட வார்த் தைகள் பல, மள மள வென வந்து போயின. இவ்வளவு நாளாக எங்கோ ஒளிந்திருந்த கண்ணி வெடிகள் மள மளவென வெடிப்பதுபோல், வெடித் தன. நம்மினப் பெண்கள் பலர் தமது பிள்ளைகளுடன் அங்கு இருந்தனர். அவர்களுக்கு அவனது செயல் பெரும் நாணத்தைக் கொடுத்தது.

அறிந்தே அன்று சேர்ந்தனர். இன்று உலகில் மது அருந்துபவர்கள், அருந் தாதவர்கள் என்று பிரித்துப்பார்த்து கணிப்பது அரிது. காரணம் மருந்து போல்மது அருந்துபவர்களும்,விருந்து களில் மட்டும் அருந்துபவர்களும் உண்டு. எப்படி இருந்தாலும் அன்று குடிகாரனுக்கு இருந்த வரவிலக்கணம் இன்று இல்லை.

அப்போ குடிகாரன் என்றால் உடுப்பு, அரையில் நிற்காது. வாய் சும்மா இருக்காது. உலகத்தில் உள்ள அத்தனை கெட்வாத்தை களின் அகராதிகளும் அவன் வாயுக்குள்ளால் வரும். சாதிச்சண்டை, வேலிச்சண்டை,வாய்க்கால் சண்டை என்று எல்லாமே இந்தக் குடியால் ஆகிவிட்டது. அங்கு நமம்மவர்களும், பிற இனத்தவர்களும் சில மணி நேரம் ஒன்றாக மகிழ்வாக பயணிக்கும் இடமாகவுள்ளது. அங்கு அந்த சில மணித்தியாலத்தில் நாம் எம்மினத்தின் பண்பாட்டை ஒழுக்கத்தை, எடுத்துக்காட்டும் ஓர் அரங்காவும்



விமானம் சுகமே பறந்து நாடு செல்ல வேண்டும் என வேண்டியவர்களைவிட, கடவுளே இவன் எனது சீட்டுக்கு பக்கத்தில் அமரப்படாது என வேண்டியவர்களே அதிகம். விமானத்தில் ஏற பணிப்பெண் அழைத் தார். விமானப்பணிப் பெண் சீட் இலக்கத்தை கேட்க, அவர் பதில் இல்லை. விமானத்தில் உள்ளே சீற் றோடு சாய்ந்த படி நித்திரை. அது குடிவெறியில் என்று பயணிகளுக்கும், பணிப் பெண்ணுக்கும் தெரியும். பின்பு சீட்டில் அமர முயற்சித்தார். தானகவே குடி அமர்த்திவிட்டது. ஆயிரம் ஆயிரம் நிகழ்ச்சிகள் வைத்து எமது இனத்தின் உயர்வைக் காட்டினாலும், இந்த ஒரு நிகழ்வு அவற்றை அடியோடு மாற்றிவிடும் என் எண்ணத்தோன்றியது. ■


# இளையவர்கள் வெற்றி பெற வாழ்த்துக்கள்

புலம்பெயர்ந்து வாழும் எமது சமூகத்தின் இரண்டாவது தலைமுறையினர் ஜேர்மனிய வாழ்வியலிலும், அதன் அனைத்து அலகுகளிலும் தமது பங்களிப்பை செய்துவரும் நிலையில், யேர்மனியில் குமஸ்பார்க் நகரில் நான்கு தமிழ் இளையோர் எதிர்வரும் செப்டம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நகர சபை மற்றும் பல்லினஒருங்கிணைப்பு சபை தேர்தல்களில் போட்டியிடவுள்ளனர். மேரி ரோஷானி தனபாலசிங்கம், ஸ்டெபானி இந்திரன், பிரவீன் சத்தியானந்தன் மற்றும் ஓடின் தனபாலசிங்கம் ஆகியோரே SPD கட்சி சார்பாக பன்முகத்தன்மை, சமூக ஒற்றுமை மற்றும் எம் சமூகத்திற்கு முக்கியமான விடயங்களை முன்னெடுக்கும் நோக்கோடு தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**அவர்களின் அர்ப்பணிப்பை நாங்கள் பாராட்டுவதோடு அவர்கள் மாபெரும் வெற்றிகளைப்பெற செய்வோம்**

4 TAMILEN. 1 ZIEL: MITGESTALTEN!




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# எது புலம்பெயர் எழுத்து?

**புலம்பெயர் எழுத்து என்பது பிரதேச அடையாளங்களைக் கடந்த எழுத்தா அல்லது அவற்றை மீளுருவாக்கம் செய்யும் எழுத்தா?**

**பல** வருடங்களுக்கு முன்னர் என்னை அறிமுகப்படுத்தும்போது 'புலம் பெயர்ந்த எழுத்தாளர்' என்று ஒருவர் கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. நான் திடுக்கிட்டுவிட்டேன். அப்பொழுது அந்தச் சொல்கூட எனக்கு பரிச்சயமாக இருக்கவில்லை. நான் இலங்கையில் இருந்தபோது எழுதினேன் பின்னர் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் எழுதினேன். எனவே நண்பர் என்னை எப்படி அந்த வகைப்பாட்டுக்குள் அடக்கினார் என்பது தெரியவில்லை. நான் மறுபடியும் இலங்கைக்கு போய் அங்கேயிருந்து எழுதினால் நான் யார் என்று கேட்டேன். அவரிடம் பதில் இல்லை. புலம் பெயர்ந்தவர் எழுதுவது புலம்பெயர் இலக்கியம் என்றால் அது தமிழில் பல நூறு வருடங்களுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. சத்திமுற்றப் புலவரின் 'நாராய் நாராய் செங்கால் நாராய்' பாடலில் ஆரம்பித்து இன்றுவரை தொடர்கிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் 'செலவழுங்குதல்' என்ற துறைகூட இருக்கிறது. பொருள்தேட வெளியூருக்குப் புறப்பட்ட தலைவன், தலைவியின் துயரத்தை தாங்கமுடியாமல் பயணத்தை நிறுத்திவிடுவது.

அகில் சர்மா என்ற இந்திய அமெரிக்கர் ஆங்கிலத்தில் எழுதுகிறார். இவர் ஒரு மில்லியன் டொலர் சம்பள உத்தியோகத்தை துறந்துவிட்டு முழுநேர எழுத்தாளராகி பிரபலமானவர். இவரிடம் ஒருமுறை 'நீங்கள் புலம்பெயர்ந்த எழுத்தாளரா?' என்று கேட்டேன். அவருக்கு கோபம் வந்துவிட்டது. 'புலம்பெயர்ந்துவிட்டபடியால் ஒருவர் எழுதுவது புலம்பெயர் இலக்கியமா? பத்திரிகைகள் வசதிக்காக ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு பெயர் சூட்டுவார்கள். மருத்துவர் வியாதிகளுக்கு பெயர் சூட்டுவதுபோல. எழுத்தாளர் இதுபற்றி அலட்டிக்கொள்ளக் கூடாது. அவர் எழுதுவது உலகத்துக்கு பொதுவான மனித உணர்வுகளை பிரதிபலிப்பதுதான் முக்கியம்,' என்றார்.



புலம்பெயர்ந்து எழுதியவர்களில் உடனே நினைவுக்கு வருபவர் நோபல் பரிசு பெற்ற ஐஸாக் பஸிவிஸ் சிங்கர் என்ற போலந்து யூத எழுத்தாளர். அவர் 33 வயதிலேயே அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்தாலும் வாழ்நாள் முழுக்க போலந்து யூதர்களைப் பற்றியே எழுதினார். இவரால் தன்னைச் சுற்றி வாழும் மற்றைய மக்களைப்பற்றி நினைக்க முடியவில்லை. மைக்கேல் ஒண்டாச்சி இலங்கையில் பிறந்து 12 வயதில் இலங்கையை விட்டு வெளியேறியவர். அவர் கடைசியாக எழுதிய வுாந ஊயவ'ள வுயடிடந என்ற நாவல் பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையை விட்டு இங்கிலாந்துக்கு புறப்பட்ட கப்பல் பயணத்தைப் பற்றி சொல்கிறது. இலங்கையில் அவர் அனுபவித்த அந்தக் கால வாழ்க்கையை வர்ணிக்கிறார். இலங்கையைவிட்டு 56 வருடங்களுக்கு முன்னர் இவர் வெளியேறிவிட்டாலும் இலங்கை இவரை விட்டு இன்னும் வெளியேறவில்லை.

எழுத்திலே புலம்பெயர்ந்த எழுத்து புலம்பெயராத எழுத்து என்ற வகைப்பாடு கிடையாது. நல்ல எழுத்து, மோசமான எழுத்து என இரண்டு பிரிவுதான். புதுமைப்பித்தன் இலங்கைக்கு போனது கிடையாது. ஆனால் அவர் துன்பக்கேணி என்றொரு அருமையான சிறுகதையை இலங்கைப் பின்னணியில் புனைந்திருக்கிறார். காஃப்கா அமெரிக்கா போனது கிடையாது, ஆனால் அவர் 'அமெரிக்கா' என்றொரு நாவல் எழுதியிருக்கிறார். நல்ல எழுத்துக்கு தேவை கற்பனைவளம். ஐம்பது வருடங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தன்னைச்சுற்றி வாழும் மக்களை சட்டை செய்யாமல் தன் மக்களைப் பற்றியே சிலர் எழுதுகிறார்கள். அதே சமயம் புலம் பெயராமலேயே உலக மக்களை நினைத்து எழுதுபவர்களும் உண்டு. எழுத்து என்பது இவை எல்லாவற்றையும் தாண்டி மனித குலத்தை நோக்கி முன்னேறுவது.



அ.முத்துலிங்கம்
(கனடா)

## 'பூமி எழுத்தாளர்'

ஸ்வீடனில் உள்ள ஒரு தச்சு வேலைக்காரர் பைன் மரத்திலே தளபாடங்கள் செய்வார்.அமெரிக்கர் ஓக் மரத்தில் செய்வார் இந்தியர் தேக்கு மரத்தில் செய்வார். இவர்களை 'பைன்மர தச்சுவேலைக்காரர்', 'ஓக் மர தச்சுவேலைக்காரர்', 'தேக்குமர தச்சுவேலைக்காரர்' என நாங்கள் விளிப்பதில்லை. எல்லோரையும் 'தச்சுவேலைக்காரர்' என்றுதான் சொல்லுவோம். அதேமாதிரி ஈழத்து எழுத்தாளர், தலித் எழுத்தாளர், பெண்ணிய எழுத்தாளர், புலம்பெயர் எழுத்தாளர் என்பதெல்லாம் ஒருவிதமான வகைப்படுத்தல்தான்.

அமெரிக்காவில் நான் என்னை 'எழுத்தாளர்' என்று அறிமுகம் செய்து கொள்வேன். என்ன மொழியில் எழுதுகிறீர்கள் என்று கேட்டால் 'தமிழ்' என்று சொல்வேன். செவ்வாய் கிரகத்தில் இருந்து ஒருவரை சந்திக்கும்போது என்னை 'பூமி எழுத்தாளர்' என்று அறிமுகப்படுத்திக் கொள்வேன். இலக்கியம் என்பது உண்மைக்கான தேடுதல். பூமியில் எங்கேயிருந்தும் அதை ஆரம்பிக்கலாம்.

நன்றி: உயிர்மை பத்திரிகை
ஆசிரியர் மனுஷ்யபுத்திரன்




Luckyfly
SRI LANKA
SEPTEMBER OFFER
ab.
750€ -799€
40 KG LUGGAGE
பயணிகள் விடுமுறை
காலங்களில் சுற்றுலா செல்வதற்கு
தேவைப்படும் பணம்
வங்கிகளில் கடன் எடுப்பதற்கு
உதவி செய்யப்படும்.
BOOK NOW
Allee str 38-40 44793 Bochum
CONTACT US
0234 2399032 | 0179 14 84892
INFO@LUCKY-FLY.DE | WWW.LUCKY-FLY.DE



# மனிதனின் இயலாமையை நீக்குவதற்காக உருவாகிய கதாபாத்திரமே சூப்பர் மான்

சிறுவர்களை மிக இலகுவில் ஈர்க்கக்கூடிய கதாபாத்திரங்கள் சூப்பர் ஹீரோக்கள். சாமானிய மனிதர்களைவிட ஏதோ ஒருவகையான சக்திகளைக்கொண்ட இவர்கள், திரையில் அநியாயங்களை தட்டிக்கேற்கும் ரீல் ஹீரோக்கள் ! நிஜ வாழ்க்கையில் யாருமே பார்த்திராத கதாபாத்திரங்களை திரையில் பார்க்கும்போது ரசிகர்கள் லொஜிக், ரியாலிட்டி போன்ற வரையறைகள் மீறப்படுவதைக்கூட பொருட்படுத்துவதில்லை. இன்றைய சர்வதேச சினிமாவில் கோடிகளை வசூலித்துக்கொடுக்கும் கேரண்டியைக்கொடுப்பவை சூப்பர் ஹீரோ திரைப்படங்கள்.

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் காமிக்ஸ் புத்தகங்களில் இடம்பெற்ற கதாபாத்திரங்கள் இன்னும் புதிதாக தோன்றக் காரணம் என்ன ? சிறுவர்களை மட்டுமே இலக்காக வைத்து உருவாக்கப்பட்ட காமிக்ஸ் புத்தகங்களுக்கு பெரியவர்களும் ரசிகர்களாக இருப்பது எப்படி? அமெரிக்காவை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட இந்த கதாபாத்திரங்களால் உலகில் உள்ள பெரும்பாலான மக்களை ஈர்த்துக் கொள்ள முடிந்ததெப்படி? சூப்பர் ஹீரோக்கள் சென்ற நூற்றாண்டிலிருந்துதான் பிரசித்தி பெற்றார்கள் என கூறப்பட்டாலும் , உண்மையில் சூப்பர் ஹீரோக்களின் வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டதெனலாம் . கதை சொல்லும் முறை அறிமுகமானத்திலிருந்தே சூப்பர் ஹீரோக்களும் நம்மோடு உறவாடத்தொடங்கிவிட்டனர் போலும். நம்முடைய ராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும், புராணங்களிலும் வருபவர்கள், சூயஸ், ஹெர்க்யூலீஸ் போன்ற கிரேக்க புராணங்களில்



இடம்பெற்ற ஹீரோக்கள் என உலகின் பல்வேறு இலக்கியங் களிலும் ஏராளமான சூப்பர் ஹீரோக்கள் உருவாகியிருந்தனர். அன்றைய சூப்பர் ஹீரோக்களின் சக்தி கடவுளிடமிருந்து கிடைக்கப்பெற்றதாக சொல்லப்பட, இன்றைய சூப்பர் ஹீரோக்கள் அறிவியலின் உதவியுடன் உருவாக்கப்பட்டனர் .

1930களில் அமேரிக்கா கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தது. கொலை கொள்ளை போன்றவை மலிந்திருந்த அப்போதைய அமெரிக்காவில், லிதுவேனியாவிலிருந்து இடம்பெயர்ந்திருந்த மிச்சேல் சிகல் (mitchell siegel) என்பவர் கொள்ளையர்களால் சுட்டுவீழ்த்தப்பட, இந்த சம்பவம் மிச்சலின் மகன் ஜெர்ரியை (jerry siegel) கடுமையாக பாதித்தது. சராசரி மனிதனான தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதையுணர்ந்த ஜெர்ரி துப்பாக்கித் தோட்டாக்கள் துளைக்காத மனிதர்கள் இருந்தால் எப்படியிருக்கும் என யோசித்தார். அப்போது, அறிவியலில் ஈடுபாடு கொண்டிருந்த ஜெர்ரி சீகளால் உருவாக்கப்பட்ட தோட்டாக்கள் துளைக்காத முதல் சூப்பர் ஹீரோ கதாபாத்திரமே சூப்பர் மேன். சொந்த நாட்டைவிட்டு வெளியேறி வாடிய ஜெர்ரி, சொந்த கிரகத்தை விட்டு வெளியேறி வாடுபவராக சூப்பர் மேனை உருவாக்கினார். உண்மையில் வலிமையை பறைசாற்ற சூப்பர் மேன் உருவாக்கப்படவில்லை. மனிதனின் இயலாமையை நீக்குவதற்காக உருவாகிய கதாபாத்திரமே அது.

சூப்பர் மேனின் மதிப்பை உணர்ந்த“ DC Comics “ நிறுவனம் ஜெர்ரியிடம் இருந்து அதன் மொத்த உரிமத்தையும் வாங்கிக்கொண்டது . பின்னாளில் கோடி கோடியாக குவிக்கப்போகும் படைப்பு என்பது தெரியாமல் வறுமை காரணமாக சொற்ப விலைக்கு அது விற்கப்பட்டது. அதேநேரத்தில் Dc comics ன் பரம வைரியான மார்வெல் காமிஸ் (marvel comics) சூப்பர் மேன் கதாபாத்திரம்போலவே தாமும் ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி அமெரிக்க மக்களை தம்வசம் ஈர்க்க நினைத்து உருவாக்கிய கதாபாத்திரமே “கேப்டன் அமேரிக்கா “ .



ப்ரியா இராமநாதன்
(இலங்கை)

இரண்டாம் உலகப்போர் காலமது, அமெரிக்க மக்களை நாட்டு பற்றை ஊட்டி போருக்கு ஈர்க்க வேண்டிய கட்டாயம். அதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்க ளில் ஒன்று மார்வெலின் “கேப்டன் அமே ரிக்கா “நாட்டுக்காக போரில் ஈடுபட துடி க்கும் இளைஞன் ஒருவன் தகுந்த உடற் தகுதியில்லாததால் ராணுவத்தால் புற க்கணிக்கப்பட , பின்னர் “super solidier serum“ மூலம் அசாத்திய சக்தி பெற்று அமெரிக்காவின் எதிரியான ஹிட்லரை பந்தாடுகின்றார்.அந்த கதாபாத்திரமும் அள்ளிக்கொடுத்த வெற்றியால் DC Comix மற்றும் marvel புதியபுதிய சூப்பர் ஹீரோக்களை உருவாக்கத்தொடங்கினர். Spider man, batman, iron man, black panther, hulk, ant man, aquaman, asterix , flash,thor, x-men, wonder women என சூப்பர் ஹீரோக்களின் தேசமானது அமேரிக்கா.

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



## வரலாறு ஒரு விசித்திரமான அரக்கன், அவன் தூங்குவது போல் பாசாங்கு செய்யும் நல்ல நடிகன் அவன்; சாதுவாக விழித்துக் கொண்டான்

# செம்மணி அணையா விளக்கு

**1985** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் கிட்டரின் தலைமையிலான இயக்கத்தால் வெற்றிகரமாக தாக்கி கைப்பற்றப்பட்டது. இங்கிலாந்தின் பிரதமர் Margaret Thatcher இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நாட்களை குறிவைத்து, சர்வதேச ஊடகங்களின் கவனத்தை அதிகளவில் ஈர்க்கும் நோக்கோடு நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதலின் பின்னர், யாழ்ப்பாண தீபகற்பகத்தில் அங்கும் இங்குமாக இருந்த குட்டி குட்டி இராணுவ முகாம்கள் மூடப்பட்டு, கோட்டையும் நாவற்குழியும் பலாலியும் பருத்தித்துறையும் பாரிய இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களாக உருமாறின.

கோட்டையிலும் பலாலியிலும் நாவற்குழியிலும் பருத்தித்துறையிலும் நிலைகொண்டிருந்த இராணுவத்தை முகாம்க ளில் இருந்து வெளியே வராது தடுத்து நிறுத்தி பெடியள் என்று சனம் பொதுவாக அழைத்த இயக்கங்கள் தாக்குதல்கள் நடாத்துவது அப்போது யாழ்ப்பணத்தில் நாளாந்த செய்தி. இராணுவ முகாம்களை சூழவும் சென்ரி நிலைகள் அமைக்கப்பட்டிருக்கும், சென்ரிகளில் காவலுக்கு முறையாக பயிற்சியெடுத்த இயக்கக்காரரோடு பள்ளிக்கூடங்களில் படித்துக் கொண்டிருந்த பெடியளும் இரவில் காவலிற்கு போவார்கள். ஊயஅி இற்கால வெளிக்கிட ஆமி அழஎந எடுக்குது என்ற சிலமன் தெரிஞ்சால், சென்ரியில் இருக்கும் பயிற்சி எடுக்காத பெடியள் கிரனைட்டின் கிளிப்பை கழற்றி எறிந்து விட்டு ஓடிவிட வேண்டும். சென்ரியில் இருந்து வோக்கிகளில் தகவல்கள் பறக்க, இயக்க முகாம்களில் தயாராக இருக்கும் தாக்குதல் அணிகள் களத்துக்கு விரைந்து ஆமியை அடித்து துரத்தி



மீண்டும் முகாம்களுக்குள் முடக்குவார்கள். எங்கட பள்ளிக்கூடத்தில் எனது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த சில நண்பர்களும் இப்படித் தான் இரவில் நாவற்குழி முகாம் சென்ரிக்கு போகத் தொடங்கிய நாட்களில் எமக்கு அறிமுமாகத் தொடங்கிய இடம் தான் செம்மணி.

1995 இறுதியில் சனமே இல்லாத வெறுமையான யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றியது. பலாலியில் இருந்து முன்னேறிக் கொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் செறிவான ஷெல் தாக்குதல்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற, யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுமாறு 31 ஒக்டோபர் 1995 இல் இயக்கம் விட்ட அறிவிப்பை ஏற்று முழு யாழ்ப்பாணமும் இடம்பெயர்ந்தது வரலாறு. வீட்டையும் வளவையும் விட்டு விட்டு மூட்டை முடிச்சுகளுடன் இரவோடு இரவாக யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்த காட்சிகளை கவிஞர் புதுவை இரத்தினதுரையின்



**ஜூட் பிரகாஷ் (அவுஸ்திரேலியா)**

> **பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது**
> **போகும் இடம் அறியாமல் – இங்கு**
> **சாகும் வயதினில் வேரும் நடக்குதே**
> **தங்கும் இடம் தெரியாமல்**

என்ற பாடல்வரிகள் காலத்துக்கும் காவிச் செல்லும். பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது பாட்டைக் காட்சிப்படுத்திய ஒளிவீச்சு வீடியோவின் காட்சிகளில் செம்மணி வெளியும் நாவற்குழி பாலமும் வந்து போனதாகவும் ஞாபகம்.

1996 களின் ஆரம்பத்தில் வன்னிக்கும் கொழும்பிற்கும் இடம்பெயர்ந்தோர் போக, மண்ணையும் தோட்டத்தையும் வீட்டையும் வளவையும் விட்டு பிரிந்திருக்க மனமில்லாத யாழ்ப்பாணத்தார் மெல்ல மெல்ல யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமரத் தொடங்கினார்கள். சமாதான தேவதையாக அரிதாரம் பூசி ஆட்சியில் அமர்ந்திருந்த சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சியில், அப்படி எந்தக் கெடுதலும் கொடுமையும் நடக்காது என்று நம்பி வந்த அப்பாவி சனத்தை அம்மையாரின் இராணுவம் இரவு வேளைகளில் வாகன ங்களில் வந்திறங்கி கடத்திக் கொண்டு போகத் தொடங்கியது. அப்படிக் கடத்திக் கொண்டு போகப்பட்டவர்களை ஆமி கொன்று புதைத்துக் கொண்டிருப்பதாக சனம் குசுகுசுக்கத் தொடங்கியது. அப்போது தான் கிருஷாந்தி குமாரசுவாமி கொடூரம் நடந்தது.

செப்ரெம்பர் 7, 1996 ஆம் திகதி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருஷாந்தி, உாநஅளைவசல பாடத்திற்கான MCQ உயர்தர பரீட்சை எழுதி விட்டு, சில வாரங்களிற்கு முன்னர் இராணுவ வாகனத்தில் மோதுண்டதால் இறந்த தனது வகுப்புத் தோழியின் செத்த வீட்டிற்கு சென்று விட்டு, கைதடியில் இருந்த தனது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த கிருஷாந்தியை, செம்மணி சோதனைச் சாவடியில் இராணுவம் தடுத்து நிறுத்தி விசாரித்துக் கொண்டிருந்ததை அந்த வழியால் போய்க் கொண்டிருந்த ஊரவர்கள் காண்கிறார்கள்.

பரீட்சைக்குப் போன பிள்ளை பிற்பகல் இரண்டு மணியாகியும் வீடு திரும்பாததால் கவலையடைந்து அக்கம் பக்கத்தில் விசாரிக்கத் தொடங்கும் கிருஷாந்தியின் தாயார் இராசம்மாவிற்கு அவரது மகளை ஆமி செம்மணி சோதனைச் சாவடியில் நிற்பாட்டி விசாரிக்கப்பட்டதை

09 ஆம் பக்கம் பார்க்க... »



# செம்மணி அணையா விளக்கு

கண்டவர்கள் கண்டதை சொல்லிவிடுகிறார்கள். உடனே தனது மகனான 16 வயதான பரி.யோவான் கல்லூரி மாணவன் பிரணவனின் சைக்கிளில் ஏறி செம்மணி இராணுவ முகாமிற்கு மகளைத் தேடி வெளிக்கிட்ட ஆசிரியை இராசம்மாவிற்கு துணையாக 38 வயதான அயலவரான கிருபாவும் தனது சைக்கிளில் போகிறார். செம்மணி இராணுவ முகாமிற்கு போன கிருஷாந்தியும் இராசம்மாவும் பிரணவனும் கிருபாவும் 45 நாட்களிற்கு பின்னர் செம்மணி இராணுவ முகாமிற்கு அருகாமையில் இருந்த புதைகுழியில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டார்கள். மிகவும் உருக்குலைந்த நிலையில் இருந்த சடலங்களை அடையாளம் காண கொலையுண்டவர்களின் உடைகளில் சலவைத் தொழிலாளியால் இடப்படும் சலவைக் குறியீடே (laundry marks) பயன்படுத்தப்பட்டது.

தன்னையும் தனது பிள்ளைகளையும் உதவிக்கு வந்த அயலவரையும் ஆபத்தில் இருந்து காப்பாற்ற ஆசிரியை இராசம்மா கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவிற்கு இலஞ்சமாக கொடுத்த இராசம்மாவின் தாலி, சோமரத்தினவின் சகோதரியிடம் இருந்து மீட்கப்பட்டு வழக்கில் சாட்சியுமானது. கைதடியில் இருந்த சைக்கிள் கடையில் இருந்து மீட்கப்பட்ட பிரணவனின் சைக்கிள் chain cover இல் ஒட்டப்பட்டு இருந்த தனித்துவமான Honda sticker உம் வழக்கில் சாட்சியமாகிறது. விசாரணைகளின் போது அந்த chain cover ஐ செம்மணி சோதனைச் சாவடியடியில் இருத்து எடுத்ததாக சைக்கிள் கடைகாரர் சாட்சி வழங்கினார். ஏப்ரல் 1997 இல் தொடங்கிய கைதடி நால்வர் கொலை வழக்கு கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்த போது, நவம்பர் 1997 இல் Amnesty International அமைப்பு யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றிய பின்னர் 540 அப்பாவி பொது மக்கள் காணாமல் போயிருப்பதாக பெயர் விபரங்கள் குறிப்பிட்டு அறிக்கை விட்டது.

ஜூலை 1998 இல் கொழும்பு உயர்நீதிமன்றம் ஆறு இலங்கை இராணுவ சிப்பாய்களிற்கு அவர்கள் புரிந்த கற்பபழிப்பு மற்று கொலைகளிற்காக மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மரணதண்டனை தீர்ப்பை அறிவிக்க முன்னர் எதிராளிகளை ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா என்று நீதிமன்றம் வினவ, முதவாவது எதிரியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ “நாங்கள் நால்வரை




கொன்றதற்காக தூக்கில் போடப்பட்டிருக்கிறோம், ஆனால் செம்மணியில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நூற்றுக் கணக்கான உடல்களை நான் உங்களுக்குக் காண்பிக்க முடியும்“ என்று நீதிமன்றத்தையும் உலகையும் அதிரவைத்தார்.

சர்வதேச அழுத்தங்களிற்கு முகம் கொடுக்க முடியாமல் தடுமாறிய சந்திரிக்காவின் அரசு, சோமரத்ன ராஜபக்ஷவின் வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்மணியில் புதைகுழிகளை தோண்ட ஜூன் 1999 இல் நீதிபதி இளஞ்செழியன் தலைமையில் விசாரணைகள் ஆரம்பித்தது. கிருஷாந் தியும் தாயும் தம்பியும் அயலவரும் கொன்று புதைக்கப்பட்ட பிரதேசத்தில், கோப்ரல் சோமரத்தின நேரடியாக வந்து அடையாளம் காட்டிய இடங்களில், நிகழந்த அகழ்வுகளில் 15 என்புத் தொகுதிகள் கண்டறியப்பட்டன. ஆனால் இந்த விசாரணைகளும் காலப் போக்கில் மூடி மறைக்கப்பட்டு, கொன்று புதைக்கப்பட்ட எங்கள் சனத்தைப் போல, தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டது சம்பந்தமான விசாரணை அறிக்கைகளும் காணாமல் ஆக்கப்பட்டு விட்டன.

வரலாறு ஒரு விசித்திரமான அரக்கன், அவன் தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருக்கும் நல்ல நடிகன். இன்று செம்மணி மீண்டும் தோண்டப்படுவதற்கும் 65 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டதற்கும் தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த வரலாறு எனும் அரக்கன் சாதுவாக விழித்துக் கொண்டதே காரணமெனலாம்.அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்தில் மின்சாரத்தில் இயங்கும் தகனக்கிரியைகள் செய்யும் கட்டிடம் கட்ட பிரதேச சபை முடிவெடுக்கிறது. பெப்ரவரி 2025 இல் தகனக்கிரியைகளிற்கான கட்டிடம் அமைக்க கட்டிட ஒப்பந்தக்காரர் அத்திவாரம் அமைக்க நிலத்தை தோண்டத் தொடங்க செம்மணியில் எலும்புக் கூடுகள் வெளிக்கிளம்பத் தொடங்கின. கிருஷாந்தியும் மற்ற மூவரும் கொன்று புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து மேற்கு பக்கமாக சுமார் 100 மீட்டர் தூரத்தில் தான் இப்போது தோண்டப்பட்டுக் கொண்டிருக்கும் மனித புதைகுழி கண்டறியப்பட்டுள்ளது.

செம்மணியில் கொன்று புதைக்கப்பட்டவர்களிற்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாமா? விசாரிக்கப்படமாலே கிடப்பில் இருக்கும் குற்றங்கள் ஒரு புறமும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விசாரிக்கப்பட்டும் உண்மைகள் கண்டறியப்படாமல் உறங்கிக் கொண்டிருக்கும் குற்றங்களும் மலை மேல் குவிந்திருக்கையில், செம்மணியில் தோண்டப்படும் புதைகுழிகளின் குற்றவாளிகள் யாரென்று தெரிய வருமா?



வரலாறு என்பது வெற்றி பெற்றவர்களால் உருவாக்குபடுவது. வென்றவர் எழுதுவது தான் வரலாறு வீழ்த்தப்பட்டவர்களிற்கு வழமையாக வரலாற்றில் இடமிருப்பதில்லை. ஆனால், வீழ்த்தப்பட்டவர்களின் வரலாறு அவர்கள் சார்ந்த இனக்குழுமங்களில் இலக்கியங்களாகவும் கதைகளாகவும் பாடல்களாகவும் ஆவணங்களாகவும் திரைப்படங்களாகவும் தலைமுறைக்கு தலைமுறை கடத்துப்பட்டுக் கொண்டே இருக்கும், கடத்துப்பட்டுக் கொண்டு இருக்கவும் வேண்டும். ஏனெனில், வரலாறு தனது நாயகர்களை அவ்வப்போது தேர்ந்தெடுத்துக் கொள்ளும். வரலாறு தனது தேவையை புரிந்து கொண்டு அதனை நிறைவு செய்யும் தலைவனை தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும். தமிழர் வரலாற்றில், இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் எங்கள் கரிகாலனும் அவ்வாறு வரலாறு தேர்ந்தெடுத்த நாயகர்களே. 13 ஆம் நூற்றாண்டில் தோற்றுப் போன சோழ சாம்ராஜ்ஜியத்தின் கதைகள் 20 ஆம் நூற்றாண்டில் வல்வெட்டித்துறையில் பிறந்த தேசிய தலைவருக்கு வழிகாட்டியாக அமைந்தது.

ஆனபடியால் தான், எங்களிற்கு இப்போது இருக்கும் தேவை, வரலாறு எங்களிற்கு மீண்டும் ஒரு தலைமையை தரும்வரை, எங்கள் வரலாற்றை, நாங்கள் எங்கள் தாயகப் பிரதேசங்களில் சுயகௌரவத்துடன் வாழ சுயநிர்ணய உரிமையும் கேட்டு நடாத்திய போராட்டத்தின் கதைகளை, செம்மணியின் கதையை, செஞ்சோலையின் கதையை, வந்தாறுமூலையின் கதையை, ஒதியமலையின் கதையை, ஓயாத அலைகளின் கதையை, குடாரப்பின் கதையை, இத்தாவிலின் கதையை, கடலை ஆண்ட கதையை, வானிலும் பறந்த கதையை எங்களுக்குள் புதைத்து வைத்திராமல், அடுத்து அடுத்து வரும் தலைமுறைகளிற்கு கதைகளாகவும், பாடல்களாகவும, திரைப்படங்களாகவும் ஆவணங்களாகவும் கடத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

ஜம்பது அறுபது எழுபது ஆண்டிகளிற்கு முன்னர், எங்களின் முன்னோர்கள் ஏற்றி வைத்த தாயகம், தேசியம், சுயநிர்ணயம் எனும் கோட்பாடுகளைத் தழுவிய எங்கள் இனத்தின் விடிவிற்கான போராட்டம் எனும் விளக்கை அணையாமல் காத்து வைப்பது காலம் எமக்கு விட்டுச் சென்றிருக்கும் கடமை. அதனால் தான் என்னவோ செம்மணியில் அண்மையில் நடந்த கவனயீர்ப்பு போராட்டத்திற்கு, அணையா விளக்கு என்று பெயரிட்டிருந்தார்கள்.





# தமிழ் இனத்தின் அடையாளங்கள் அனைத்தும் திட்டமிட்டு பறிக்கப்பட்டு வரும் ஆபத்து

ஆனால் 2009 இற்கு பின்னர் தமிழ் மக்களின் தலைமைகள் என்று கூறிக்கொண்டோர் சிங்கள அரசுகளிடம் மண்டியிட்டார்கள் அவர்களுடன் உறவாடினார்கள்தங்களது சுயநல அரசியலுக்காக தமிழ் மக்களை சிங்கள தேசத்திடம் கொண்டுசென்று அடகுவைத்தார்கள்.தமிழ் மக்களுக்கு எதிராக மிகப் பாரிய இன அழிப்பை செய்த சரத் பொன்சேகாவை 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழர் மண்ணில் கொண்டு சென்று நிறுத்தி ஒரே மேடையில் ஏறி நின்று கையசைத்த நொடியிலிருந்து ஈழத்தமிழருடைய போராட்டம் சுக்குநூறாக்கப்பட்டது.ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்ற வெறியுடன் 2009 இல் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேரை கொலைசெய்த ஒரு இராணுவத்தளபதியுடன் அந்த வெறிச்செயல் நடந்து 1 வருடத்துக்குள்ளாக அவரது கையை பிடித்துக்கொண்டு ஒரே மேடையில் நட்புறவு பாராட்டிய வரலாறு உரிமைக்காக போராடிய எந்த ஒரு இனத்தினது வரலாற்றிலும் இடம்பெற்றிராத ஒரு கறைபடிந்த வரலாற்றை தமிழ் தலைவர்கள் என்று கூறிக்கொண்டோர் செய்திருந்தார்கள். அன்றே ஈழத்தமிழருடைய போராட்டம் சிங்களவர்களின் மண்ணில் புதைக்கப்பட்டு விட்டது.

2009 இற்கு பின்னர் வடக்கு, கிழக்கில் செயல்படுகின்ற அரசியல் இயக்கங்கள் தனிப்பட்ட இருப்புக்காகத்தான் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு பல நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன.இவர்கள் ஒருபோதும் தமிழர்களுக்கு விமோசனங்களைப் பெற்றுத் தருவார்கள் என்று நம்புவதற்கு இவர்களுடைய செயல்பாடுகள் இருந்ததில்லை. தமிழர்கள் நலன்களைவிட இவர்கள் தமது அரசியல் இருப்புக்குத்தான் முன்னுரிமை கொடுத்து போராடி வருகின்றார்கள்.அந்த அடிப்படையில் தான் சர்வதேசத்தை கையாள்வது எப்படி என்பதை தமிழ் மக்கள் சிந்திப்பது அவசியமாகிறது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது விவகாரம் சர்வதேச அரங்கில் பேசப்படுகிறது என்றால் அது ஜெனீவாவில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மாத்திரமே.ஆகவே அந்த சபையில் தமிழர் விவகாரம் அடுத்த கட்டத்துக்கு நகர்வதற்கு எவ்வாறான நகர்வுகளை முன்னெடுப்பது,எவ்வாறான இராஜதந்திர முன்னெடுப்புகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் ஒரு சட்ட குழுவொன்றை சர்வதேச ரீதியில் ஸ்தாபிப்பது தொடர்பில் பாதிக்கப்பட்டோர் கவனம் செலுத்துவது அவசியமாகும்.அது மாத்திரமல்ல, சர்வதேச அரங்கில் ஈழத்தமிழரது விவகாரம் கூடிய கவனத்தைப் பெற வேண்டுமாயின் பாதிக்கப்பட்ட சமூகம் புத்துணர்ச்சியுடன் செயற்படுவது அவசியமாகும். அவர்களுடைய போராட்டங்கள் மற்றும் அவர்களுடைய செயற்பாடுகள் பெரும் வீச்சுடன்-தொடர்ச்சியாக- சோர்ந்து போகாத செயற்பாடுகளாக இருப்பது அவசியமாகும்.

அதேபோல், ஐ.நா மனித உரிமைகள் பேரவையை கையாளும் முழுமையான பொறுப்பையும் பாதிக்கப்பட்டவர்களை தங்களுடைய கையில் எடுக்க வேண்டும்.அரசியல்வாதிகளை நம்பி அவர்கள் பின்னால் செல்லும் போக்கை மாற்றி புலம்பெயர் சமூகத்தில் வாழும் அறிவுஜீவிகளுடன் கைகோர்ப்பது அவசியமாகும். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரை சரியான முறையில் கையாள தமிழர்கள் தவறியிருக்கிறார்கள். செம்மணி மாத்திரம் தான் தமிழர்களின் இனஅழிப்புக்கான அடையாளம் என்ற போர்வையில் அதனை சுற்றியே ஈழத்தமிழரது நகர்வுகள் வரையறுக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.இனியும் இவ்வாறான சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகளை நிறுத்தி வைப்பதே இனத்தின் விமோசனத்துக்கு சரியான நகர்வாக இருக்கும்.

வடக்கு, கிழக்கில் இயங்கி வருகின்ற அரசியல் கட்சிகளும் அவற்றின் மக்கள் பிரதிநிதிகளும் தமிழர் விமோசனங்களைப் பெற்றுத்தர முடியாது நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்கள் செல்லாக் காசுகள் என்பதனைப் புரிந்து புதிய வியூகங்களுடன் ஒரு பலமான அரசியல் இயக்கம் தமிழர்களுக்கு தேவையாக இருக்கிறது. அதைவிட தமிழர் தேசம் ஒன்றாக அணிதிரள்வதும் அவசியமாகும். ஒரு இனமாக போராடிய ஒரு இனம் இன்று சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கிறது. அதிலும் கொடியது இளந்தலைமுறையின் கவனங்கள் திட்டமிடு சிதறிக்கப் பட்டிருக்கிறது.

இன்று வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற இளந்தலைமுறையினர் காளியாட்டத்துக்கும் போதைவஸ்துகளுக்கும் பின்னால் செல்லும் ஒரு சூழல் திட்டமிட்டு நகர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் கல்வியில் உயர்ந்த இடத்தில் இருந்த வடக்கு மாகாணம் அண்மையில் வெளியாகியிருக்கும் க.பொ.த.சாதாரண தரப்பரீட்ச்சை பெறுபேற்றில் இறுதி மாகாணமாக தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழ் இனத்தின் அடையாளங்கள் அனைத்தும் திட்டமிட்டு பறிக்கப்பட்டு வரும் மிக ஆபத்தான சூழலை ஈழத்தமிழர்கள் புரிந்துகொள்வது அவசியமாகும்.படித்த-பண்பாடான-தெளிவான சமூகம் ஒன்று இருக்கும் பட்சத்தில் மாத்திரம் தான் அந்த சமூகத்திற்கு மதிப்பும் மரியாதையும் பயமும் சர்வதேச அரங்கில் இருக்கும்.

அது என்று இல்லாமல் போகிறதோ அன்றே அந்த இனம் இந்த பூமியில் வாழ்வதற்கு அருகதையில்லாத இனமாக மாறிவிடும்.ஆகவே ஈழத் தமிழர்களை சுற்றி நடக்கும் திட்டமிட்ட நிகழ்வுகளை கவனத்தில் கொண்டும் எமது போராட்டங்களுக்கும் ஒரு நீதியை பெற்றுக்கொள்வதற்கும் ஒரு தேசமாக-ஒரு இனமாக அணி திரள்வது காலத்தின் கட்டாயமாகும்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# எங்கட ஆச்சி

05







காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

## முந்தி எங்கட வீட்டுக்கு வீடு ஜிம் இருந்தது இப்ப வீட்டுக்கு வீடு ஜிம்முக்குப் போகினம்





எங்கட ஆச்சி முந்தி நெடுகவும் அம்மியில அரைச்சுத்தான் கறி வைப்பா. மல்லி மிளகாயை அம்மியிலை அரைச்சுப்போட்டு பேந்து தேங்காய்ச் சொட்டை சின்னன் சின்னனா உடைச்சு அதோடை சேத்து இழுத்து அரைச்சு நல்ல விழுதா உருட்டி எடுத்து வைக்கிற கறியள் வலு உருசை கண்டியளோ. அரைச்சு வைக்கிற வெள்ளைக் கடல் மீன், நண்டு, இறால் கறியள் முருங்கைக்காய் பிரட்டல் கறி எண்டால் தனி உருசை. அதிலும் கொஞ்சம் கூனி இறால் போட்டு அரைச்சு வைக்கிற முருங்கைக்காய் கறியை அடிக்க ஆளே கிடையாது எண்டுதான் சொல்லுவன் .ஆச்சி முருங்கைக்காய் பால் கறி வைக்கேக்கையும் அம்மியிலை கூடு அரைச்சு எடுத்துத்தான் வைப்பா . ஆச்சி அரைச்சு வைக்கிற வெள்ளைக் கடல் கயல்மீன் குழம்பும் இல்லாட்டால் மணலை மீன் குழம்பும் மொட்டைக்கறுப்பன் அரிசிச் சோறும் தாற அந்த உருசையை எந்தப் பெரிய ஹோட்டலிலும் எவ்வளவு குடுத்தாலும் ருசிக்கேலாது. உப்பிடி அரைச்சு வைக்கிற குழம்பு கொதிக்கேக்கை வாற மணமே ஆக்களுக்கு வாயிலை எச்சில் ஊற வைக்கும் . அதுகும் உந்த மணம் வேலிக்கு மேலாலை மட்டைக் காலுக்காலை எண்டு பூந்து வெளிக்கிட்டு ஒழுங்கை எல்லாம் போய் வரும். அப்பிடி போய் வரேக்கை ஒழுங்கையிலை போறவை வாறவைக்கு எல்லாம் வாயில எச்சில் ஊறும்.

அது மாதிரி ஆச்சி அம்மியில அரைக்கிற இஞ்சிச் சம்பலுக்கு கொஞ்ச ஊர் நல்லெண்ணையும் ஊத்திக் குழைச்சு எடுத்தால் சோத்தைச் சாப்பிட வேற கறி ஒண்டும் தேவைப்படாது. அதமாதிரி பழஞ்சோத்துக்கும் உந்த அம்மியிலை அரைச்ச சம்பல் போட்டு ஆச்சி குழைச்சு உருண்டை உருண்டை ஆக்கித்தர பூவரசம் இலையிலை வாங்கித் திண்டு முடிய குழைச்ச சட்டியையும் வழிச்சுத் துடைச்சு நக்கிப்போட்டுத்தான் மற்ற வேலை பாப்பம். சில வேளை உந்த சட்டி நக்குறதுக்கு ஆர் நக்கிறது எண்டு சண்டையும் வரும்.அதை மாதிரித்தான் பிள்ளைப்பெத்த பெண்டுகளுக்கும் சாமத்தியப்பட்ட பெட்டையளுக்கும் முந்தி இஞ்சி, சாறணை, உள்ளி, மிளகு, மல்லி , நற்சீரகம் எல்லாம் போட்டு அம்மியில அரைச்சு பத்தியக்கறி வைச்சுக் குடுப்பினம். அப்பதான் வயித்துப் புண் மாறும் எண்டு ஆச்சி சொல்லுறவ.

உத மாதிரி ஆற்றையும் வீட்டில பிள்ளைப் பெத்து வரப்போகுது எண்டால் மருந்துக் கடையளிலை ஊறல் சரக்கு வாங்கியந்து வெய்யில்லை காய வைச்சு காஞ்ச அம்மியிலை அரைச்சு எடுத்து சாராயப்போத்தில் வாங்கி அதுக்குள்ளை உந்த ஊறல் சரக்குத்தூளைப் போட்டு மூடி நெல்லுச்சாக்குக்குள்ளை ஒரு ஆறுமாதம் வைப்பினம்.பிள்ளைப் பெத்தவைக்கு அவை அண்டண்டைக்கு தோஞ்சதும் உந்த ஊறலிலை கொஞ்சம் ஊத்திக்குடுக்க அவை மூக்கைப் பொத்திக் கொண்டு குடிப்பினம்.உந்த அரைச்சபத்தியக்கறியும் உந்த ஊறலும் கைகண்ட மருந்து பிள்ளைப் பெத்த பெண்டுகளுக்கு இருக்கிற எல்லா நோக்களும் பலகீனமும் இருந் இடம் தெரியாமல் ஓடிப்போகும் எண்டு ஆச்சி சொல்லுவா.

அதமாதிரி அம்மியில இருந்து அரைக்கிறது கை, கால், இடுப்பு,முதுகு, நெஞ்சுக்கு நல்ல பயி ற்சி எலும்புகளும் தசையளும் நல்ல பலமா வரும் எண்டு ஆச்சி சொல்லுவா. அதோட அம்மியிலை குந்தி எங்கட அம்மா கோவிந்தி பள்ளிக்கத்தில அரிவரி படிக்கேக்கை பள்ளிக்கம் போக முந்தியும் பேந்து பள்ளிக்கத்தால வந்த பிறகும் பால் குடிச்சவ எண்டு ஆச்சி பெருமையாச் சொல்லுவா. அது மாதிரி அம்மியில நெடுக அரைச்சா உந்தப் பெண்டுகளுக்கு நெஞ்சில வாற கண்ட வருத்தம் ஒண்டும் வராது வெட்டுற அறுக்கிற வேலை ஒண்டும் வராது எண்டு சொல்லுவா.

ஆச்சி உப்பிடிச் சொன்னதிலையும் ஒரு உண்மை இருக்கத்தான் செய்யுது. ஏனெண்டால் முந்தி அம்மியிலை அரைச்சு ஆட்டுக்கல்லிலை அரைச்சு இருந்து அரைச்சா பெண்டுகள் ரெண்டொரு முக்கலோடை வலு சுளுவா ஆக்கினை வேதினை ஒண்டும் இல்லாமல் பிள்ளைப் பெறலாம் எண்டுவா. டாக்குத் தர்மார் ஆசுப்பத்திரி எண்டு அலைஞ்சு திரிஞ்சு வயித்தை வெட்டி காசையும் கரியாக்கத் தேவையில்லை கண்ட கிண்ட வருத்தம் வாதையளையும் வாங்கத் தேவையில்லை எண்டுவா. அதிலும் நெடுக அம்மியில அரைக்கிற பெண்டுகளுக்கு பிள்ளைப் பெறுகிற காலத்தில நல்லாப்பால் சுரக்கும் எண்டு சொல்லுவா.

உரலிலை நெல்லுக்குத்தி மா தூள் இடிச்சு கிணத்திலை தண்ணி அள்ளிக் குடத்திலை காவியந்த திருவலையில குந்தி இருந்து திருவின ஆக்கள் விடியக்காலமையே எழும்பி வயல் வேலை ஆட்டடி மாட்டடி வேலை எண்டு செய்த ஆக்கள் எல்லாம் கண்ட கிண்ட வருத்தம் எண்டு ஆசுப்பத்திரியளுக்குப் போறது குறைவு. அவை ஒருத்தரும் பாயிலை கிடந்தது இழுபட்டது வலு குறைவு எண்டு நான் சொல்லுறதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளுவியள் . இப்ப நாகரீகம் முத்திப் போய் காசு பணம் புழக்கம் கூடி சனத்துக்கு வீடுவழியை வேலை செய்யப் பஞ்சி . எல்லாத்துக்கும் கண்டறியாத மிசின்களை வாங்கி வைச்சு வேலை செய்யினம் . உண்ணானச் சொன்னால் தின்னுறது குடிக்கிறது பெய்யிறது பேலுறது படுக்கிறது எழும்பிறது மட்டுந்தான் எங்கட ஆக்கள் கனபேர் இப்ப தங்கட பாட்டிலை செய்யினம் மாற்றும்படி எல்லாம் மிசிந்தான் செய்யுது.உதாலதான் அவைக்கு கண்ட கிண்ட வருத்தங்கள் எல்லாம் வந்து சீக்காளியளாகி டாக்குத் தர்மாருக்குப் பின்னாலை திரியினம். சில வேளை உதுகளுக்கும் மிசின்கள் வந்தா வாங்கிகிப்போட்டுப்போட்டு பேசாமல் இருப்பினம் போல.

சுருக்கமாச் சொன்னா முந்தி எங்கட வீட்டுக்கு வீடு ஜிம் இருந்தது இப்ப வீட்டுக்கு வீடு ஜிம்முக்குப் போகினம்.


Nandy's Catering & Partyservice




Düsseldorf

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.

பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974

www.Nandys.de | email: info@nandys.de




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள்;
# இனசங்காரத்தின் உச்சம்



**நம் தேசத்தில் நடந்த இந்தக் கோரமான படுகொலைகளுக்கு நான் ஒரு சரித்திரத்தின் சாட்சியாக நிற்க நேர்ந்தது துயரமானது.**

**1983** ஜூலை இனவன்முறை, இலங்கை வரலாற்றில் நடந்து முடிந்த கொடூர இனசங்காரத்தின் வெளிப்பாடாகும். வீதிகளில் ,வீடுகளில், அரசாங்க அலுவலகங்களில், கடைகளில், சந்தையில், வாகனங்களில் என்று தமிழர்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர் தீயூட்டி எரிக்கப்பட்டனர்.தமிழர் வீடுகள் தாக்கப்பட்டன் கடைகள் எரிக்கப்பட்டன்சொத்துகள் சூறையாடப்பட்டன. தமிழர்கள் தாம் ஆண்டாண்டுகாலமாக வாழ்ந்த இடங்களிலே அகதி யானார்கள்.

இவற்றிகெல்லாம் சிகரம் வைத்தாற்போல வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியற் கைதிகள் சிறைக்குள்ளேயே கொலைசெய்யப்பட்டனர். இலங்கையின் தலைநகரில், அதி உயர் பாதுகாப்புடன் கூடிய வெலிக்கடைச் சிறைச்சாலயில் (Youthful Offenders Building) இளம் பராயத்தினருக்கான சிறைக்கூடத்தில் நாங்கள் ஒன்பதுபேர் சிறைவைக்கப்பட்டிருந்தோம். வண.பிதா சிங்கராயர், வண பிதா பிலிப் சின்னராசா, அருட் திரு ஜெயதிலகராஜா, டாக்டர் ஜெயகுலராஜா, டேவிட் ஐயா, டாக்டர் தர்மலிங்கம், டாக்டர் ராஜசுந்தரம், கோவை மகேசன், நான் ஆகியோர் அங்கு சிறைவைக்கப்பட்டிருந்தோம். ஜூலை 25 ஆம் திகதி காலையில் உடற்பயிற்சிக்காக நாங்கள் சிறைவாசலுக்கு வெளியில் கொண்டு வரப்பட்டபோது, சிறைச்சாலையின் பெருஞ் சுவருக்குமேலால், பொரளைப் பக்கமிருந்து வானளாவக் கரும் புகை எழும்பிப் பரவுவதைப் பார்த்து, ‘அது என்ன? ‘என்று சிறைக்காவலரிடம் கேட்டபோது, ‘உங்களுக்குத் தெரியாதா? கொழும்பில் இனக்கலவரம் நடந்துகொண்டிருக்கிறது ‘ என்று அவர் பதிலளித்தார்.

‘நாங்கள் உயர் பாதுகாப்புகள் நிறைந்த சிறைக்குள் (Maximum Security Prison) இருக்கின்றோம். வெளியில் தமிழர்கள் தாக்கப்படுகின்றார்கள். இன்று எங்களைப் பார்க்கவரும் குடும்பத்தினர் அல்லது பார்வையாளர்கள் இன்று வெளியில் வராமல் வீட்டிலேயே இருந்துவிட வேண்டும்‘ என்று நாங்கள் ஏங்கினோம்.

நீதி அமைச்சின் கீழ் இயங்கும் சிறைச்சாலையில் நாங்கள் மிகுந்த பாதுகாப்புடன் இருக்கின்றோம் என்று நாங்கள் நம்பியிருந்தோம். ‘பேயரசு செய்தால் சாத்திரங்கள் பிணம் தின்னும் தேசத்தில்‘ நாமிருந்தோம்.அன்று மாலை ,சிலுவை வடிவில் அமைக்கப்பட்டிருந்த செப்பல் கட்டிடத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த 35 தமிழ் அரசியல் கைதிகள் கொலைசெய்யப்பட்டனர். குட்டிமணி, தங்கத்துரை உட்படக் கொல்லப்பட்ட அவர்களின் கதையைக் கூறுவதற்கு, அந்தச் சிறைக்கூடத்தில் யாருமே மிஞ்சி இருக்கவில்லை.

அதற்கடுத்த மறுநாள் நாங்கள் சிறைவைக்கப்பட்டிருந்த கூடத்தின் மேல்மாடிக்கு நாங்கள் ஒன்பது பேரும் மாற்றப்பட்டோம்.



பேராசிரியர்
மு.நித்தியானந்தன்
(இங்கிலாந்து)

நாங்கள் இருந்த தனி அறை களுக்குள், வெளிச் சிறைகளில் வைக்கப்பட்டி ருந்த ஏனைய தமிழ்க் கைதிகள் கொண்டு வரப்பட்டு, ஓர் அறைக்கு மூவர் வீதம் விடப்பட்டனர்.

ஜூலை 27 ஆம் திகதி, அச்சம் நிறைந்த சூழலில்,சிறைச்சாலையின் பிரதி ஆணையாளர் கிறிஸ் தோபர் ஜேன்ஸ் அவர்களைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்திருந்தோம். அவர் நல்ல மனிதர். அச்சிறைச்சாலை ஆணையாளராக விருந்த ஜே.பி. தெல்கொட பொல்லாத இனவாதி. அச்சமயத்தில் அவன் வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தான். ஒருமுறையல்ல, இரண்டாம் தடவையும் அங்கு மீண்டும் ஒரு படுகொலை நடத்தப்படும் என்று யார்தான் நம்பியிருக்கமுடியும்?அராஜகம் கோலோச்சும் அந்தத் தேசத்தில் என்னதான் நடக்கமாட்டாது? எல்லாமே நடந்தேறியது!




அன்று பகல் எங்கள் சிறைக்கக்கூடத்தைச் சூழ பெரும் விசில் சத்தங்களும் ஆட்கள் திரளும் கூச்சலும் கேட்டபோது நாங்கள் திகைத்துப் போனோம். நான் நீண்டகாலம் விண்ணப்பித்து, என க்கு வழங்கப்பட்டிருந்த சிறுமேசையின் மேலேறி, ஜன்னல் வழியே கீழே பார்த்தபோது,தொகைதொகையாகச் சிங்களக் கைதிகள் எங்கள் சிறைக்கூடத்தின் முன்னால் திரண்டு நிற்பதையும், வெளியில் காவலுக்கு நின்றிருந்தசிறைக் காவலாளியின் கையிலிருந்த சிறைக் கதவுகளின் சாவிக்கொத்தினை எடுத்துக் கொண்டனர். ஆனால், எந்தச் சாவி முன் இரும்புக் கதவைத் திறக்கும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இப்போது தாங்கள் கையில் வைத்திருந்த இரும்புத் துண்டங்களால் பூட்டை உடைக்க ஆரம்பித்தனர். கதவு திறந்து விட்டது. கீழ் தளத்தில் இருந்த செல்களை வெறியர்கள் உடைக்க ஆரம்பித்தனர். சிறைக்கதவின் இரும்புக் கம்பிகளுக்குள் போர்வையைப் பிணைத்து, கதவைத் திறக்கவிடாமல் போராடினார்கள். உள்ளே நுழைந்துவிட்ட பாதகர்கள், வெறுங்கைகளுடன் நின்றிருந்த தமிழ்க் கைதிகளைக் கொன்றனர். போர்வை கிழிந்து, அறுந்துபோகும் நிலையில் , கதவு திறந்துவிடாமல் மயிரிழையில் சிலர் தப்பியிருந்தனர். கீழ் தளத்தில் தங்கள் வெறியாட்டத்தை முடித்துவிட்ட கொலைகாரர்கள் இப்போது மேல்மாடியில் நாங்கள் இருந்த கூடத்தை நோக்கித் திரும்பினார்கள்.

எங்களின் சிறைக்கதவை இப்போது உடைக்க ஆரம்பித்தனர். கீழே வெற்றிகரமாக கொலைவெறியை நிகழ்த்தி முடித்த வெறியோடும் வேகத்தோடும் கதவின் மீது வெறிகொண்டு தாக்கினர். இப்போது கதவு உடைபட்டுவிட்டது.

‘எய் மல்லி அப்பிட்ட கானவா?‘ என்று டாக்டர் ராஜசுந்தரம் அவர்களிடம் கேட்டார்.

திறந்திருந்த கதவிற்கூடாக ஒரு கொலைகாரன் அவரைப் பிடித்து வெளியில் இழுக்க, இன்னொருவன் அவரது தலையில் இரும்புக் கம்பியால் ஓங்கி அடிக்க, குழாயிலிருந்து தண்ணீர் பீறி டுவதுபோல,

I5 ஆம் பக்கம் பார்க்க...




வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில்
Wirtschaftsingenieurin
ஆக படிப்பை நிறைவு செய்த
36 வயது நற்குணமுள்ள சைவ
வேளாள பெண்ணிற்கு பொருத்தமான
பட்டதாரி மணமகனை யேர்மனியில்
எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

மணமகன் தேவை!

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in



மங்கல இசை

உங்கள் மங்களகரமான
வைபவங்கள் அனைத்திற்கும்
நாடுங்கள்.

ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி
தவில் லயஞானச் சுடரொளி

கே.பி.செல்வநாயகம்

+ (49 )020249655696
Handy 004915161010905
01786664426

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
Straßenfest der Tamilen 2025
05.09.2025
Fr. 16:00 - 00:00
06.09.2025
SA. 11:00 - 00:00
07.09.2025
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
SCAN ME
Dortmunder U - Park der Partnerstädte
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
VKII RUHRBEZIRK e.V.
தமிழர் கலையகம் TKD
SIVAN DIGITAL
VMDO Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
ortel MOBILE
ஊடகஅனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
ETR
PAARPOM
IBC தமிழ்
எம்தமிழ்
KOLLYWOOD KINO
0151633 633 33 | 176 246 371 75 | 0176 4711 8711 | 0151 279 909 90



# வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள்; இனசங்காரத்தின் உச்சம்

மண்டையிலிருந்து ரத்தம் பெருக, அக்கணத்திலேயே அவர் தரையில் சரிந்தார். நான் மேசையை உடைத்து, நான்கு கனமான கால்களைக் கையில் எடுத்து, சாம் ஜெயக்குல ராஜாவின் கையில் ஒரு தடியையும், பாதர் சின்னராஜா கையில் ஒரு தடியையும் கொடுத்து , திறந்துவிட்ட கதவுக்குள் வரவிடாமல், அந்த இரும்புக் கதவின்மீது தொடர்ந்து தாக்கினோம். ஒருவன் என்னை நோக்கி எறிந்த இரும்புக் கம்பி, என் மீது சிராய்த்துக் கொண்டு வந்தாலும், அந்தக் கம்பியைப் பற்றிக்கொண்டேன். ஜெயக்குலராஜாவிடம் அந்த இரும்புக் கம்பியைக் கொடுத்ததும், அவர் ஓங்கி இரும்புக் கதவினை அடித்தபோது, மறுபக்கமாக நின்ற கொலைகாரர்கள் உள்ளே நுழையமுடியாமல் அஞ்சி நின்றனர். தொடர்ந்து நானும் பாதர் சின்னராஜாவும் கதவிற்குள் அவர்கள் நுழைய விடாமல் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தோம். அரைமணி நேரம் ஒரு ஜீவமரணப் போராட்டத்தை நடத்தினோம்.

இறுதியில், இராணுவத்தினர் கண்ணீர்ப் புகை அடித்தவண்ணம் சிறைக்குள் உள்ளிட்டபோது, கொலைவெறியர்கள் வெளியில் ஓடிவிட்டனர். நாங்கள் கைகளை மேலே உயர்த்தியபடி, கீழே இறங்கி வந்தபோது, கீழ் தளத்தின் செல்களுக்கிடையிலான நடைபாதை முழுதும் இரத்தத்தால் வழிந்து நிறைந்திருந்தது. கொல்லப்பட்டவர்களின் உடல்களைக் கொ லைகாரர்கள் சிறைக்கூடத்தின் வெளியில் இழுத்துவந்து கிடத்தியிருந்தனர். உயிர்தப்பிய நாங்கள் அங்கிருந்து இராணுவட்ரக்குகளில் ஏற்றப்பட்டு, இரத்மலானை விமான நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மட்டக்களப்புச் சிறைச் சாலைக்கு மாற்றப் பட்டோம்.



குட்டிமணி, ஜெகன், தங்கதுரை கைது

கண்டி –போகம்பர சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மறுசிரா என்ற சிறிபால கொல்லப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டாரா? அல்லது தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டாரா என்று ஆணைக்குழு அமைத்து விசாரணை மேற்கொண்ட அரசு, 53 தமிழ் அரசியற் கைதிகள் கொல்லப்பட்டபோது, சட்டையில் ஒட்டிக்கொண்ட தூசியைத் துடைத்து விட்டுச் செல்வதைப்போல கடந்து சென்றுவிட்டது. கொல்லப்பட்ட கைதிகளின் சடலங்களைக் கூட பெற்றோர், உறவினர்களிடம் கையளிக்காமல், அவர்களே எரித்துவிட்டனர்.

அரசாங்கம் முன்னின்று நடத்திய கொலைச் சம்பவம் இது. ரோஜர் ஜயசேகர என்ற ஜெய் லரின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சி இது.கொனாவெல சுனில் என்ற ரவுடியை சிறைக்குள் அனுப்பி, இந்தப் பாதகச் செயலை அரசு,இராணுவம், பொலிஸ், நீதிமன்றம் அனைத்தும் ஒருங்கிணைந்து நடத்தி முடித்திருக்கின்றதென்றால், யாரிடம் நீதி கேட்பது? இந்தச் சிறைப் படுகொலைகளைப் பற்றி விசாரணை மேற்கொண்டு, உயிர் உயிர்தப்பியுள்ளோரைச் சந்திக்கும் முயற்சியில் , மனித உரிமை இயக்கத்தைச் சார்ந்த சூர்யா விக்ரமசிங்க சென்னை வந்து என்னைச் சந்தித்தார். ஓர் அறிக்கையையும் தயாரித்து அரசிடம் வழங்கியிருந்தார். பேராசிரியர் ராஜன் ஹூல் வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகளைப் பற்றிய நம்பகமான அறி க்கையினை வெளியிட்டிருக்கிறார்.

நம் தேசத்தில் நடந்த இந்தக் கோரமான படுகொலைகளுக்கு நான் ஒரு சரித்திரத்தின் சாட்சியாக நிற்க நேர்ந்தது துயரமானது.

## கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்

பாவனையற்ற இடத்திற்கும் எந்த எல்லையோ வேலியோ கிடையாது. அதனால் அந்த ஓடுதளத்தை நாம் சைக்கிள்கள் ஓடிப்பழக குத்தகைக்கு எடுத்ததமாதிரி. எனவே நாம் சரோஜாதேவி பார்க்க குறுக்கு மறுக்காக விமானம் நிலையம் போட்டோம்.

அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தின் எல்லாப்பகுதிகளிலும் இருத்து வந்து குவிந்து நின்றார்கள்.

எங்கள் உயரத்திற்கு பனைமரம் நடந்து வந்தாலும் தெரியாது. எனவே எம்மைப் போன்றவர்கள் பலர் விமான நிலையத்தில் விமானம் நிற்க பழுது பார்க்க போட்டுக் கொண்டு இருந்த ஒரு வளைவு இரும்பபுக் கேடரில் ஏறி இருத்துகொண்டோம். விமானம் வந்து இறங்கியதும் பார்க வசதியாக இருக்கும் என்று. விமானம் வந்தது, எம். ஜி.ஆர், சரஜோதேவி வந்து இறங்கினார்கள். மரத்தில் இருந்த பறைவைகளும் பல பறந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டது. மறுநாள் பாடசாலை முழுக்க எம். ஜி.ஆர், சரஜோதேவி தான் முழுநேரப் பாடம். பலர் எம். ஜி.ஆரின் நிறத்தைப் பற்றியும், சரோஜாதேவி யின் அழகு பற்றியும் கதைத்தனர். நானும் அவர்கள் சொல்வதைக்கேட்டு இரசித்தேன். எனக்கும் அவர்கள் சொல்லச் சொல்ல அந்த உருவம் கண்முன் வந்துபோனது.

உண்மையாக நான் இருவரையும் காணவில்லை, மக்கள் மக்கள் திலகத்தை பார்க்க விடாமல் என்னை மறைத்து விட்டார்கள். அந்த இரும்புக்கூரை



வளைவில் இருந்து என்னால் சட்டென்று இறங்கி ஓடிச்செல்ல முடியாது போய் விட்டது.அவர்கள் திறந்த வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டார்கள். எனது அப்பா பாலாலி றோட்டில் வந்து பஸ் ஆல் இறங்க அந்த இடத்தில் சனம் ஒன்றும் இல்லை அப்பாவுக்கு எம். ஜி.ஆரும் சரோஜாதேவியும் இருவரும் கை காட்டி சென்றதாக அம்மா சொன்னா. அப்ப கண்டவர் அவர் எவருக்கும் கண்டதாக சொன்னதை நான் காணவில்லை. நான் காணவில்லை ஆனால் கண்டதாக இன்று வரை சொல்லிவந்தேன். அப்போது விமான நிலையம் போய் உயரத்தில் ஏறி நின்றும் காணவில்லை என்று சொன்னால் வெட்கம் என்று காணவில்லை என்று, சொல்லவில்லை.

இப்ப வயது உயரத்தில் நிற்பதால், வெட்கம் எதனையும் மறைக்கவில்லை. உண்மையைச் சொல்கிறேன் நான் எம். ஜி.ஆர், சரஜோதேவி இருவரையும் பார்க்கவில்லை. “கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டதில்லை““

(“கண்டவர்கள் பேசுவதில்லை, பேசுபவர்கள் கண்டதில்லை“) என்பது நானும் அப்பாவும்தானோ.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





# நடுப்பக்கம்

# தாத்தாக்கள் வாழும் வீடு

**சேவியர்**
(தமிழ்நாடு)

> **தாத்தாக்களின் மௌனம் வெற்றிடத்தின் அடையாளமல்ல, சொல்லப்படாத கதைகளின் புதையல்.**

தாத்தாக்கள் வாழும் வீடுகள் ஆசீர்வாதங்களின் அரண்மனைகள். தலைமுறைகளை தன் கிளைகளின் கதகதப்பில் காத்து மகிழ்கின்றனர் தாத்தாக்கள். அவர்களின் வேர்களிலிருந்தும் மன்னிப்பின் மலர்கள் மேலெழும்பிப் பறக்கின்றன. அன்பொன்றே அறிகின்ற அவர்களின் தளிர்களில் கனவுகளின் நிறங்கள் உலராமல் இருக்கின்றன. பழைய தலைமுறையின் கதைகளையும், எதிர்கால தலைமுறைக்கான விதைகளையும் தாங்கியபடி அவர்கள் மௌனித்திருக்கிறார்கள். மறந்து போன பால்யக் கனவுகளுக்கு அவர்களின் நினைவூட்டல் கதைகள் தான் வெளிச்சமடிக்கின்றன.

காலங்களின் புன்னகையும், கவலைகளும், கனவுகளும், இழப்புகளும் ஓடிய நதியாய் அவர்களுடைய முகத்தின் சுருக்கங்கள் சிரிக்கின்றன. அவை சரித்திரத்தின் சரிவுகளில் கடந்த காலக் கதைகளைக் கரைகளில் ஒதுக்குகின்றன. அவர்களின் மௌனம் வெற்றிடத்தின் அடையாளமல்ல, சொல்லப்படாத கதைகளின் புதையல். அவர்களின் அருகில் அமர்ந்து பொறுமையின் பாய்மரக் கப்பலில் பயணிப்பவர்களுக்கே அந்தக் கதைகள் கிடைக்கும்! அவர்களின் பெருமூச்சுகள் வரலாற்றின் தாழ்வாரங்களில், குடும்பத்தின் குளிர் கதைகளுக்கு வெப்பம் அளிக்கின்றன. தாத்தாவுடனான பேரனின் உறவு அலாதியானது. அது வேறெந்த உறவுகளை விடவும் தனித்துவமானது! கவித்துவமானது! அவர் தனது முதுமையின் கரத்தினால் ஒரு தளிர் கரத்தைப் பற்றும் போது நேற்றைய கனவுகளும், நாளைய நம்பிக்கைகளும் ஒரே புள்ளியில் தைக்கப்படுகின்றன.

அவர் பேரனுடன் கதைக்கும் போது அந்த உலகங்களுக்குள் நழுவி விழுகின்றனர். அந்தக் கதாபாத்திரங்களில் வாழ்கின்றனர். அவர்கள் புலம் பெயர்ந்த வலிகளையும், புலன் பெயரும் மொழிகளையும் அடுத்த தலைமுறைக்கு பகிர்ந்தளிக்கின்றனர். அவர்களுடைய சுருக்கங்கள் கனவுகளின் நெருக்கங்கள். இழப்புகளின் உருக்கங்கள்.

பேரனுக்கும் தாத்தாவுக்குமான அன்பு,இரண்டு கள்ளம் கபடமற்ற இதயங்களின் உறவுப் பரிமாற்றம். அனுபவங்களைக் கடந்த அமைதியின் நதியும், அனுபவங்களைத் தொடாத நதியின் துவக்கமும் சந்தித்துக் கொள்ளும் அற்புத அனுபவம் அது. அவர்கள் புன்னகைத்துக் கொள்ளும்போது கடத்த காலமும் எதிர்காலமும் கைகுலுக்கிக் கொள்கின்றன. அவர்கள் தழுவிக் கொள்ளும் போது இரண்டு காலங்கள் உயிர் தழுவிக் கொள்கின்றன.

தாத்தாக்கள் மீது வைக்கப்படும் குற்றசாட்டு ஒன்றுண்டு, பேரப் பிள்ளைகளைக் கெடுப்பது அவர்கள் தான் என்று ! ஒளித்து வைத்திருக்கும் சாக்லெட்கள், பரிசுப் பொருட்கள் என அவர்கள் ஒரு புது உலகில் உலவுவார்கள். ஒரு தந்தை கண்டிப்புடன் பிள்ளையை வளர்ப்பார், ஒரு தாத்தா மன்னிப்புடன் பேரனை அணைப்பார். எந்த ஒரு பேரனுக்கும் தன் தாத்தா ஒரு ஹீரோ தான் ! பிடித்தமானதை வாங்கித் தரும் சூப்பர் மேன். பட்டம் பறக்க விடுவதற்கும், சைக்கிள் ஓட்டுவதற்கும், ஓடையில் குளிப்பதற்கும், கடை வீதியில் நடப்பதற்கும் எல்லாவற்றுக்கும் தாத்தாவே அவர்களின் ஆதர்ஷ நாயகன். தாத்தாக்களின் சட்டைப் பை தான் பேரன்களின் முதல் ஜாயிண்ட் அக்கவுண்ட் !

ஒரு பேத்தி, தாத்தாவின் முதல் இளவரசி ! தாத்தா பேத்தியின் உற்சாகப் பங்காளி. அவரது தோளே அவளது சிம்மாசனம். அவரது கைத்தட்டலே அவளது ஆஸ்கர் விருது. ஒரு தாத்தா பேத்தியை வாரியணைக்கையில் உலகம் தனது இதயத்துடிப்பை ஒரு வினாடி நிறுத்தி புன்னகைத்துக் கடக்கிறது. தன் மகன் அடையாத உயரங்களைத் தன் பேரனின் வாழ்வில் கண்டு மகிழ்வார் தாத்தா. ஏன், தான் அடையாத உயரங்களை, தான் தழுவாத நிகழ்வுகளை, தான் அனுபவிக்காத வாய்ப்புகளை தன் பேரன் அனுபவிக்கையில் உளமார குதூகலிப்பார் அவர். ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் பேரனை சான்றோன் எனக் கேட்ட தாத்தா! எனலாம். பேரனின் பாதைகளே, தாத்தாக்களின் எல்லைக் கோடுகள்.

பேரன்களைத் தீர்ப்பிடாமல் அவர்களைத் தூக்கிச் சுமப்பவர்கள் தாத்தாக்கள் தான். அவர்களே எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் பேரன்களை அங்கீகரிப்பவர்கள். அப்பாக்களைப் போல அடிக்கொரு அறிவுரையுடன் தாத்தாக்கள் பேரன்களை பயமுறுத்துவதில்லை. அவர்களின் அறிவுரைகள் அழகிய கதைகளாய் மனதுக்குள் ஊன்றப்படும். தாத்தாக்கள் உடல் வலிமையால் எதையும் சாதிப்பதில்லை, ஆனால் ஒரு தாத்தா இருக்கும் போது யாருக்கும் இல்லாத வலிமையை பேரப்பிள்ளைகள் பெற்றுவிடுகிறார்கள். நமக்காக ஒருவர் இருக்கிறார் எனும் நினைப்பே அந்த அசாதாரண வலிமையை அளித்துவிடுகிறது.

தாத்தாக்களின் கேள்விகள் நிற்பதில்லை, தொடர்ந்து கொண்டே இருக்கும். அவை பதில்களுக்கான கேள்விகளல்ல, அவை பாசத்துக்கான கேள்விகள்.

இன்றைய உலகம் தாத்தாக்களை உதாசீனம் செய்கிறது. அவர்களை அதிகப்படியான சுமையாய்க் கருதுகிறது. அதனால் தான் முதியோர் இல்லங்கள் முண்டியடித்துக் கொண்டு முளைக்கின்றன. ஒரு காலத்தில் தூண்களாய் இருந்தவர்கள் இன்றைக்கு துரும்புகளாய் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் கரன்சிகளை எண்ணியவர்கள் இப்போது உதிர்ந்து விழும் இலைகளை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அமைதியாய் பால்கனியிலோ, படிக்கட்டுகளிலோ அமர்ந்து மௌனத்தைத் தின்று கொண்டிருக்கிறார்கள்.

நாம் பழைய புகைப்படங்களைப் பார்த்து சிலிர்க்கிறோம், ஆனால் பழைய மனிதர்களை புறக்கணிக்கிறோம். வாட்சப்களில் வரும் கதைகளைப் படிக்கிறோம், நம் வாசல்களில் இருக்கும் கதைகளைப் படிக்க மறுக்கிறோம். நமது வேகத்துக்கு அவர்கள் ஈடு கொடுப்பதில்லை

17 ஆம் பக்கம் பார்க்க...





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

என்பதால் அவர்களுக்கு நாம் கை கொடுப்பதில்லை. நமக்கு ரீல்ஸ்களின் மீது இருக்கும் மோகம் ரியல்களின் மீது இல்லாமல் போய் விடுகிறது.

தாத்தாக்களை உதாசீனம் செய்யும் இல்லங்கள், சாவான பாவத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றன. அவர்களை வாழ்வில் இணைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய குடும்பப் புகைப்படங்களுக்கு மட்டுமல்ல, குடும்ப முடிவுகளிலும் அவர்களை இணைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் உங்கள் பந்திகளிலும் புன்னகை செய்யட்டும். மர த்தின் கனிகளை உண்ணும் தாம் அதன் வேர்களையும் விசாரிக்க வேண்டும்.

# தாத்தாக்கள் வாழும் வீடு

தாத்தாக்களின் கதைகள் முற்றுப் புள்ளியை நோக்கிய கடைசி கால சாமரங்கள். அவற்றை ரசியுங்கள், கேளுங்கள். சேட்ஜிபிடிகள் தராத வாழ்வியல் அனுபவங்களை தாத்தாக்களின் உடல்மொழிகள் கற்றுத் தரும்.

தாத்தாக்கள் எப்போதும் நம்மோடு இருப்பதில்லை. அவர்கள் இருக்கும் வரை



வாழ்க்கையை கொண்டாட்டமாய் அனுபவியுங்கள். அவர்களுக்கும் வாழ்க்கையைத் திருவிழாவாய்த் திருப்பிக் கொடுங்கள்.

இன்றைக்கு நீங்கள் அவர்களைத் தழுவ மறுத்தால், காலம் நழுவியபின் குற்ற உணர்வில் கலங்குவீர்கள். தாத்தாக்களை நேசிப்போம்.

அவர்களின் கடந்த காலம் இனிமையாய் இருந்ததா, எதிர்காலம் இனிமையாய் இருக்குமா என்பதெல்லாம் நமக்குத் தெரியாது.

ஆனால் இந்தக் கணத்தை இனிமையாய்க் கொடுக்க நம்மால் முடியும். அதைச் செய்வோம். ஏனெனில் இன்றைய பேரன் நாளைய தாத்தா ! தாத்தாக்களே நீண்ட கால வாழ்வின் ஆசீர்வாதங்கள். நரைகளே இறைவன் அளிக்கும் கிரீடங்கள்.






# கலைவிளக்கு சு.பாக்கியநாதன் அவர்களின் பவளவிழாவில் நறு மணம்வீசிய நூல் ‘வேர்களும் பூக்கின்றன’

“வேர்களும் பூக்கின்றன“ என்ற நூல் 11.07.2025 பவளவிழா வில் வெளியீட்டு செய்யப்பட்டது. வெற்றிமணி ஆசிரியர் திரு மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் கலைவிளக்கு திரு. சு.பாக்கியநாதன் அவர்களின் பல்கலைக்கழகக் காலத்து வேர்களின் நினைவுகளை அசைபோடுவதாகவும், அந்த வேர்களின் சிறப்பால் பூத்துக் குலுங்கும் மலர்களை பற்றியதுமான ஒரு உரை நடையில் அமைந்த நூலாகும்.

எழுத்தாளர் திரு.வி.சபேசன் அவர்கள் வேர்களும் பூக்கின்றன நூலில் வேர்களின் ஆழம்பற்றி உரையாற்றினார். “நூலாசிரியரின் தேடுதல் ஆழமாக இருக்கிறது.






படங்கள் மூலம் பல செய்திகள் வெளிப்படுகின்றன. இது ஒரு சிறந்த ஆவணமாக தாயாரிக்கப்பட்டு உள்ளது‘ என்றார். மேலும் ‘ ஒரு பரமேஸ்வராக் கல்லூரியை இனி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்‘ என்று சொன்னால், அதனை ஒரு பல்கலைக் கழகமாக உருவாக்க எவ்வளவு உழைப்பு வேண்டும். அந்த உழைப்பைக் கொடுத்த முதல் தொகுதி மாணவர்களில் ஒருவர்தான் இங்கு மேடையில் அமர்ந்து இருக்கும் திரு. பாக்கியநாதன் அவர்கள் என்றார்.

இதழியல் கலை வேள் திரு.த.ரவீந்திரன் நூல் பற்றி தம்கருத்தைக் கூறுகையில் இது ஒரு சிறந்த ஆவணமாக இருக்கின்றது. நூலின் இடம் பெற்ற படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாக அமைந்து இருப்பதால் கவனம் சிதறாது எழுதப்பட்ட கருத்தின் மீது கவனம் செல்ல வழிசொல்கிறது.அது மட்டுமன்றி ஒரு பிறந்தநாள், ஒரு பவளவிழா இப்படிக் கொண்டாடும் பொழுது ஒரு வரைப் பற்றி வாழ்த்துக்களுடன் ஒரு மலர் வெளியீடு செய்வார்கள்.

அனால் இங்கு அவர் கற்ற பல்கலைக் கழக ஆரம்பகால வரலாறும், திரு பாக்கியநாதன் அவர்களின் செயற்பாடுக ளும், அங்கும் இங்கும் ஆவணப்படுத்தப் பெற்றது ‘ மேலும் சிறப்பு என்றார்.

பேராசிரியர் மு.நித்தியானந்தன் நூல் பற்றி கூறுகையில் இந்த நூல் ஒரு சிறந்த ஆவணம். 1974 ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பித்த வேளை அங்கு பேராசிரியர்களாக இருந்தவர்கள், மாணவர்கள் இவர்களின் ஒன்று பட்ட உழைப்பு எப்படிப் பட்டது என்பதை காணமுடிகிறது. பேச்சு நடையில் இந்த நூல் அமைந்து உள்ளது, நூலாசிரியர் மு.க.சு. சிவகுமாரன் அந்த நடையில் வெற்றி பெற்றுள்ளார்





என்றே சொல்ல முடிகிறது என்றார்.

பேராசிரியர் மு.நித்தியானந்தன், வெற்றிமணி மு.க.சு சிவகுமாரன் இணைந்து நூலை வெளியிட்டுவைத்தனர். சிறப்பு பிரதிகளை கலைவிளக்கு சு.பாக்கியநாதன், திருமதி விக்கினா பாக்கியநாதன் ஆகியோர் இணைந்து மேடையில் வழங்கினர்.

வெற்றிமணி வெளியீட்டகத்தின் 31 வது வெளியீடாக “வேர்களும் பூக்கின்றன‘ நூல் நறுமணம் வீசியதில் மட்டற்ற மகிழ்ச்சி.



# யேர்மனியில் பல இளம் கலைஞர்களை உருவாக்கிய தலைசிறந்த மிருதங்கவித்துவான் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள்



சங்கீதரத்தினம்
பிரணவநாதன் அவர்கள்

இசைப் பாரம்பரியம் மிக்க கலைக் குடும்பத்தில் தோன்றியவரும், தன்னைப் போல்தனது வாரிசுகளையும் இசைத்துறைக்கே இனிதுவக்கத் தந்தவரும், 20ம் நூற்றாண்டின் ஈழத்தின் இசை முன்னோடிகளில் ஒருவரும், ஈழத்தின் இசை மரபு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிப் பெருமை தேடித் தந்தவருமான, இசைப்புலவர் இசை வேந்தர், இசைமாமணி, கலைச்சுடர், ஏழிசைக்குரிசில், ஈழத்து இசைத்தந்தை என்ற பெருமைக்குரிய மறைந்த இசை மாமேதை, திரு.என்.சண்முகரத்தினம் அவர்களின் மைந்தர்களில் ஒருவரே, லயகுமாரன் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள்.

சிறு வயதிலிருந்து தந்தையிடம் மென் முளவு வாத்திய இசையை முறைப்படி பயின்று, தொடர்ந்து சங்கீத பூசணம் திரு. ஏ.எஸ்.ராமநாதன் அவர்களிடம் மேலும் பயின்று, யாழ் பல்கலைக் கழக நுண்கலைக் கல்லூரியில், சங்கீத இரத்தினம் என்கின்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் அதிவிசேடப் பிரிவில், 13 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவரும், யேர்மனி கலை பண்பாட்டுக் கழகத்தின் மூத்த தாள வாத்தியக் கலைஞரும், புலம்பெயர் மண்ணில் வாழும் தாளஞானம் இசைஞானம் கொண்ட இளைய தலைமுறையினருக்கு, மென்



இசை மாமேதை,
திரு.என்.சண்முகரத்தினம்

முளவு வாத்திய இசையை அயராது போதித்து வருபவரும், ஐரோப்பிய மேடைகளில், நமது தாயகக் கலைஞர்களுக்கு மட்டுமல்லாது, தமிழகத்தின் முன்னணிக் கலைஞர்களுக்கும் இசைமுழக்க மிட்டு, இசைப்பிரியர்களின் இதயத்தைக் கவர்ந்தவரும், தாயகத்திற்கு பெருமைசேர்த்து வருகின்ற மூத்த கலைஞர்களில் ஒருவருமான புகழ்பூத்த மிருதங்க வித்துவான், லயகுமாரன் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள்.தான் கற்ற கலையை பல மாணவர்களுக்கு புகட்டி அவர்களை இன்று பெரும் கலைஞராக்கிய பெருமைக்குரிய வித்துவான் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள்.




வெற்றிமணி வெள்ளிவிழாவின் (2019) போது
வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் சங்கீதரத்தினம்
பிரணவநாதன் அவர்கள்

சகோதரர் கலாசூடாமணி சண்முகராகவன் அவர்களின்
இசைக் கச்சேரியில்...



## சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன் மறைவிற்கு வெற்றிமணியின் அஞ்சலி



ஐரோப்பாவில் மிகச் சிறந்த மிருதங்கவாத்தியக் கலைஞராக திகழ்ந்த சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன் அவர்களின் இழப்பு (16.07.2025) ஈடு செய்ய முடியாததொன்று.

யேர்மனியில் பல மிருந்தங்க வாத்தியக்கலைஞர்களை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு. 2019ம் ஆண்டு வெற்றிமணி பத்திரிகையின் வெள்ளிவிழாவின் போது வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுத்து கௌரவித்தோம். மிருதங்க வித்துவான்,லயகுமாரன் சங்கீதரத்தினம் பிரணவநாதன். அவர்களுக்கு வெற்றிமணியின் அஞ்சலி.

## லயஞானகுமாரன் ச.பிரணவநாதன் அவர்கள் மறைவிற்கு எமது அஞ்சலி



13.8.1951 - 16.07.2025

யேர்மனியில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக பரத நாட்டிய அரங்கேற்றம்,
சங்கீத அரங்கம் மிருதங்க அரங்கம் இந் நிகழ்வுகளில் மிருதங்க வித்வான் சங்கீதரத்னம்,
லயஞானகுமாரன் ச. பிரணவநாதன் அவர்கள் ஆற்றிய பங்கு அளப்பெரியது.
பரதத்திற்கு மிருதங்கம் உயிர்நாடி., பக்கவத்தியம் என்றால் மிருதங்கம் தனிரகம்.
இன்று அப்பெரும் கலைஞன் எம்முடம் இல்லை. எம்முடன் பயணித்த
அந்த இனிய பொழுதுகளை நினைத்துப் பார்க்கின்றோம். அந்த விரல்கள் ஓய்வுபெற்றன.
இசைக்கடவுளுடன் அவர் உயிர் கலந்துவிட்டது.

அன்னாரின் மறைவிற்கு எமது அஞ்சலி.

வானதி வாணி நர்த்தனாலயம், கஸ்தூரி சலங்கை ஒலி நாட்டியக் கலா மன்றம்,
ஆடற்கலாலயம் , நிருத்திய நாட்டியாலயம்; யேர்மனி. 16.07.2025

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# தூக்கம் நம்மை இளமையாக வைக்குமா? விஞ்ஞானம் சொல்வது என்ன?

தூக்கம் என்றால் என்ன? இரவில் இருட்டில் படுத்து கண்களை மூடும் ஓர் இயற்கையான செயலா? அல்லது, மனித உடலின் மிக ஆழமான மறுசீரமைப்பு மந்திரமா?

அன்றாடம் நாம் எதையும் நிறுத்தாலும், ஆனால் நேரத்தையும் நாம் வயதாகுவதையும் நிறுத்தவே முடியாது . தோலில் சிறு கோடுகள் விரிகின்றன, மூளை சற்று மெதுவாகக் கருதுகிறது, உடல் வேகமாக சோர்கிறது. இது இயற்கையின் வழி. ஆனால் அந்த வழியை மாற்றி அமைக்க முடியுமா? இளமையை ஒரு நாள் கூட தடுத்து நிறுத்த முடியாது என்றாலும், அந்தப் பயணத்தைக் கொஞ்சம் மென்மையாகக் கொண்டு செல்ல முடியுமா? இவ்விடத்தில் தூக்கம் எடுக்கும் பங்கு, விஞ்ஞானத்தைச் சுவாரசயமான கோணத்தில் பார்ப்பதற்கான கதவைத் திறக்கிறது.




வயதானபோது தூக்கம் குறையும் என்று நாம் அடிக்கடி கேட்கின்றோம், அது உண்மைதான். அதிகமான இரவில் கழிவறைக்குச் செல்லும் தேவை, சீரற்ற ஹார்மோன் செயல்பாடு, மன அழுத்தம் மற்றும் நீடித்த உடல்நலப் பிரச்சனைகள், இந்த எல்லாச சிறிய சிக்கல்களும் சேர்ந்து, நமக்குக் கிடைக்க வேண்டிய ஆழ்ந்த தூக்கத்தை மக்குக மெதுவாகத் தின்றுக் கொண்டே செல்கின்றன. ஆனால் இந்த நிலை மாற்றங்களை மையமாக வைத்து எல்லோரும் பேசும்போது, அந்தப் பிரச்சனையை எதிர்மறையாகவே காண்கிறோம். ஆனால், இப்போது கேள்வியை திருப்பிப் பார்க்க வேண்டிய நேரம் வந்துள்ளது. நாம் தூங்கும் விதம் நம்மை எப்படி வயதானவர்களாக மாற்றுகின்றது என்பது பற்றி யாரும் அதிகம் பேசுவதில்லை.

நாம் உறங்கும் போது, உடல் சநடிழழவ ஆகிறது. ஆழ்ந்த நிலை தூக்கத்தின் போது, நமது தசைகள் பழுதுபார்க்கப் படுகின்றன, ஹார்மோன்கள் சமநிலைப் படுத்தப்படுகின்றன, மற்றும் மூளை தன்னுடைய "நாளாந்த கழிவு மேலாண்மையை" செய்துகொள்கிறது. அந்த நேரத்தில், நினைவுகள் ஒழுங்குபடுத்தப் படுகின்றன, முக்கியமான தகவல்கள் நீடித்த நினைவாக சேமிக்கப்படுகின்றன. மூளையில் இருந்தே சில நரம்பியல் வேதிப்பொருட்கள் தங்கள் உச்ச நிலையை விட்டு பின்வாங்குகின்றன. இந்தச் செயல்கள் அனைத்தும் பசுமையான வாடையை விடாமல் வேலை செய்யும் பூங்காவைப் போல, மெதுவாகவும் சீராகவும் நிகழ்கின்றன.

வயதானதுடன் நம் மூளையில் மறுசீரமைப்புகள் அதிகமாகின்றன. இந்த நிலைமைக்கு நேரடியாகப் பாதிப்பது, நாம் தூங்கும்போது செயல்படும் க்ளிம் பாடிக்சிஸ்டம்எனப்படும்கழிவுச் சுத்திகரிப்பு அமைப்பு. மூளையில் ஆபத்து நிலையில் சேரும் beta-amyloid போன்ற நச்சு புரோட்டின்கள், நம்மை அழிக்கத் தொடங்கும் முன்னே நீக்கப்பட வேண்டும். இவை நீக்கப்படாத பட்சத்தில், நினைவிழப்பு, மெதுவான சிந்தனை, அல்லது அதன் பின் பரிணாமமாக அல்சைமர் நோய் வரை செல்லும் அபாயம் உள்ளது. இவை அனைத்தும் தூக்கத்தின் தரத்தால் நேரடியாகக் கட்டுப்படுகின்றன.



**Dr.நிரோஷன் தில்லைநாதன்**
(யேர்மனி)

இந்த தூக்கம், நோய் எதிர்ப்பு மண்டலத்தையும் ஊக்குவிக்கிறது. வயதானவர்களில் இந்த அமைப்பு இயற்கையாகவே சோர்வடைகிறது. ஆனால் ஆழ்ந்த தூக்கத்தின் போது, உடல் பாதுகாப்பு செல்கள் மீண்டும் செயலில் திரும்புகின்றன. இதயமும் ஓய்வெடுக்கும்: இரவில் துடிப்பு மற்றும் ரத்த அழுத்தம் குறைவதால், இருதயத்திற்கு நாள் முழுக்க வேலையாயிருந்த தசைகளை சற்று ஓய்வெடுக்கச் செய்யும் வாய்ப்பு கிடைக்கிறது. மற்றொரு முக்கிய பங்கு, இன்சுலின் எதிர்வினைச் செயல்பாட்டிலும் உறங்கும் நேரம் நேரடியாக ஈடுபடுகிறது. குறைந்த தூக்க நேரம், நீரிழிவு நோயுக்கான பாதிப்பை அதிகரிக்கக் காரணமாகிறது என்று பல ஆய்வுகள் எச்சரிக்கின்றன. இந்த சிக்கல்களை முறையாக தீர்க்கும் ஒன்று நம்மிடையேதான் இருக்கிறது: அது தான் தூக்கம்! அது கடையில் வாங்க முடியாது. அது ஒரு இயற்கையான செயல், ஆனால் அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது நாம்தான். உங்களைத் தூங்கச் செய்வது வெறும் மெத்தை அல்ல, அது உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கும் பின் தளமாக உள்ளது. சில பிரீமியம் படுக்கை நிறுவனங்கள் இதனைப் புரிந்து கொண்டு "தூக்கம் என்பது வாழ்க்கையை மாற்றக்கூடிய சக்தி" என்று வலியுறுத்துகின்றன. ஆனால் உண்மையில், நாம் அனைவரும் அதை உணரத் தொடங்கும் நாளே பெரும் மாற்றம் ஏற்படும் நாள்.

அன்றாடம் நாம் ஒரு நாளைய தூக்கத்தை தப்பவிடும்போது, அது நம் உடலில் இருக்கும் வயதின் மீதான ஒவ்வொரு தாக்கத்தையும் அதிகரிக்கிறது. தூக்கம் என்பது ஒரு நாளின் முடிவல்ல, அது உங்கள் அடுத்த நாளின் தொடக்கமே.

இப்போது நீங்கள் உங்கள் தூக்கத்தை மதிக்கத் தொடங்குவதற்கான சரியான நேரம். ஒரு நாள் நீங்கள் உங்கள் முகத்தில் ஒரு சிறிய கோடு பார்த்து "நான் முதிர்கிறேன்" என்று கூறும்போது, அதுக்கு நேரம் காரணம் அல்ல, நீங்கள் உங்கள் தூக்கத்தை விட்டுவிட்டீர்கள் என்பதுதான் காரணம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

வயது வந்துவிடும். ஆனால் அதனை எப்படி எதிர்கொள்கிறோம் என்பதே நாம் யார் என்பதை தீர்மானிக்கிறது!







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.







# இளைய ஆற்றலாளர் விருது

ஆன்மீகப் பணிகளோடு அறப் பணிகளையும் ஆற்றுகின்ற செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் 64 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, வழமை போன்று இந்த ஆண்டும் 20.07.2025 சனிக்கிழமை இளம் ஆற்றலாளர்களுக்கு விருது வழங்கும் வைபவம் அன்னபூரணி மண்டபம் தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

சாதனை படைக்கும் இளைய தலைமுறையை கௌரவித்து அவர்களை மேலும் உற்சாகப்படுத்தி,நமது சமூகத்திற்கு அவர்கள் செய்யும் ஒப்பற்ற சேவையினை மதிப்பளித்து மேலும் அவர்களை நமது சமூகத்தின்பால் இயங்க வைக்கும் நல்லதொரு முயற்சியின் ஓர் அங்கமாக, செஞ்சொற்செல்வரின் பிறந்தநாள் அறநிதிச் சபையினர் வருடந்தோறும் இரண்டு இளம் சாதனையாளர்களை விருது வழங்கி கௌரவித்து வருகின்றனர்.





அந்த வகையில் இந்த ஆண்டு சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி அவர்களுக்கும், கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா அவர்களுக்கும் இன்றைய தினம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி அவர்கள் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின்,சத்திரசிகிச்சை துறையின் தலைவராகவும் சிரேஸ்ர விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார். கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா அவர்கள் புவியியல் துறையின் தலைவராக மட்டுமன்றி,சான்றுப்படுத்தப்பட்ட வானிலை ஆய்வாளராகவும் பணியாற்றி வருகிறார்.

இவ் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் சிவன்சுதன் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன்,ஏராளமான விருந்தினர்கள், பொதுமக்கள், மகளிர் இல்ல மாணவிகள், சமயப் பெரியவர்கள், சிவாச்சாரியார்கள்,கலந்து சிறப்பித்து தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களையும் விருது பெற்ற இரண்டு இளம் ஆற்றலாளர்களையும் மனதார வாழ்த்தினார்கள்.சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி அவர்களுக்கும்,யாழ் பல்கலைக்கழக புவியியல் துறையின் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா அவர்களுக்கும்,எமது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

# ஒரு சப்பாத்தை விடவும் யூதர்கள் பெறுமதியற்றவர்களாம்



க.ஆதவன்
(டென்மார்க்)





2 ஆம் உலகமாயுத்தத்தில் சப்பாத்திலும் விட யூதர்கள் பெறுமதியில்லையெனச் சொல்லி, பிடரியில் சுட்டு இந்த ஆற்றில் வீசினார்களாம்.அந்தச் சப்பாத்துகள் இவை.

டானூப் நடைபாதையில் காலணிகள் – துயரத்தின் நினைவு நாள். ஹங்கேரிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்கு வெகு தொலைவில் இல்லாத புடாபெஸ்டில் உள்ள டானூப் ஆற்றின் கரையில், 1940களில் மக்கள் அணிந்திருந்த அறுபது ஜோடி பழைய காலணிகள். பெண்களுக்கான காலணிகளும், ஆண்களுக்கான காலணிகளும்,



குழந்தைகளுக்கான காலணிகளும் உள்ளன. அவற்றின் உரிமையாளர்கள் அவற்றை இப்போதுதான் விட்டு வெளியேறி அங்கேயே விட்டுச் சென்றது போல், அவை தண்ணீரின் ஓரத்தில் சிதறடிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் கிடக்கின்றன.

நீங்கள் இன்னும் கூர்ந்து கவனித்தால், காலணிகள் துருப்பிடித்து, இரும்பினால் செய்யப்பட்டு, கரையின் கான்கிரீட்டில் பதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவை 1944-1945 குளிர்காலத்தில், ஆரோ கிராஸ் கட்சியின் உறுப்பினர்களால் டானூப் ஆற்றின் கரையில் ஹங்கேரிய யூதர்களுக்கான நினைவுச்சின்னமாக நிறுவி உள்ளனர். இது 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.






# ரெய்கி






கௌசி சிவபாலன் (யேர்மனி)

கண்ணை மூடித் தியானம் செய்கின்ற போது ஏதோ ஒரு அருட்சக்தி எமக்குள்ளே இருந்து மேலெழுவது போல எமது ஆற்றல் எழுத்தின் மூலமாக வெளிப்படுகின்றது. எண்ணங்கள் படைப்பாக ஆற்றல் மிக்க சொற்களாக வெளிப்படும் போது அந்த ஆற்றல் நோய் தீர்க்கின்ற சக்தியாக ஏன் வெளிவர முடியாது. மனம் நொந்து போடுகின்ற சாபம் எப்படிப் பலிக்கின்றது? மனம் விரும்பிச் சொல்லுகின்ற வார்த்தைகள் எப்படி மனிதர்களை வாழ வைக்கின்றன? ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும். கொல்வதும் வெல்வதும் மனிதசக்தியால் முடிகின்ற போது நோயைத் தீர்க்கும் சக்தி மட்டும் மனித ஆற்றலுக்கு இல்லையென்று யாரால் சொல் முடியும்? தன்னுடைய கைகள் மூலமாக தன்னுடைய ஆற்றலைச் செலுத்தி நோயாளர்களை இயேசுநாதர் குணமடையச் செய்தார் என்பதை எல்லோரும் படித்திருக்கின்றோம். இயேசுநாதர் மனிதராகப் பிறந்து தெய்வமாக மாறியவரென்றால், அந்த மகத்தான சக்தியை எம்மால் ஏன் முயற்சியின் மூலம் பெற முடியாது. இன்று எம்முடைய கண்முன்னே பல தெய்வமாக்கப்பட்ட மனிதர்களைத் தரிசிக்கின்றோம். அவர்கள் எல்லோரும் தம்முடைய ஆராவைப் பெருக்கிப் பெரு முயற்சியினால் தம்முடைய ஆற்றலைப் பெருக்கியவர்களே. அவ்வாறு பிரபஞ்ச ஆற்றலை எமது கைகள் மூலமாகப் பெற்று எமக்குள் இறை ஆற்றலைச் செலுத்துகின்ற ஒரு கலையே ரெய்கி என்று அழைக்கப்படுகின்றது. அது பற்றி விரிவாக இக்கட்டுரையில் பார்ப்போம்.

ரெய்கி என்னும் சொல் ஜப்பானிய மொழியில் இருந்து வந்தது.

Rei – (Universal Energy – பிரபஞ்சம்)
Ki – (Life Energy – உயிர்ச்சத்தி)

அதாவது உயிராற்றலை ஆற்றுப்படுத்துவது. பிரபஞ்ச சக்தியை எடுத்தே சகல உயிரினங்களும் உயிர் வாழுகின்றன. எனவே பிரபஞ்ச ஆற்றலை எடுத்து சகல பிரச்சினைகளையும் சரி செய்ய முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதே ரெய்கி. உடலின் பல பாகங்களில் சக்தி மையங்கள் இருக்கின்றன. ஆனால், ரெய்கியில் நாம் கைகளினால் பிரபஞ்ச சக்தியை வாங்கி எம்முடைய ஜீவசக்தியைப் பெருக்கி அதை மற்றவர்களுக்குக் கொடுக்கின்றோம்.

இக்கலையை மிக்கவ் உசுய் Mikao Usui என்னும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவரே கண்டுபிடித்தார். 15.08.1865 இல் பிறந்த இவர் புத்த மதத்தில் ஆர்வம் கொண்டு வாழ்க்கை முழுவதும் புத்தருடைய கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். தற்காப்புக்கலையைப் பயில வேண்டும் என்பதற்காகச் சில தியான முறைகளையும் ஆற்றுப்படுத்தல் (Healing) முறைகளையும் கற்க வேண்டும் என்பதற்காகப் பல இடங்களுக்குச் சென்று ஆராய்ச்சி மேற்கொண்டார். மருந்து கொடுக்காமல் நோயைத்தீர்க்க முடியுமா என்று அவர் சிந்தித்து, அதற்காக 1922 ஆம் ஆண்டு ஜப்பானிலுள்ள குராமா (Kurama) என்னும் மலைப்பகுதிக் குச் சென்றார். இது கைரோ (Kyto) என்னும் நகரத்துக்குப் பக்கத்தில் உள்ளது. அந்த மலைப் பகுதியில் 21 நாள்கள் உணவுகூட எடுத்துக் கொள்ளாமல் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். ஒருநாள் திடீரென்று ஒரு மின்னல் பாய்ந்தது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படுகின்றது. அப்போது அவர் கண்களை விழித்துப் பார்த்த போது அவரைச் சுற்றி ஒரு வெண்மையான புகைமண்டலத்தை உணர்ந்தார். அச்சமயத்திலே உடலினுள் எல்லா செல்களையும் ஏதோ ஒன்று அழுத்தவதாகவும் அதிலிருந்து விடுபட முடியாத நிலையிலும் அவர் இருந்தார். அந்த நிலையில் ஒரு ஞானம் பெற்றவராக அவரால் உணர முடிந்தது. இவ்வாறுதான் ரெய்கியின் ஆரம்பம் இருந்தது. அன்றிலிருந்து அவர் பெற்ற ஆற்றல் மூலமாக பிறருடைய நோய்களைத் தீர்க்கக் கூடிய சக்தியைப் பெற்றார்.



## எப்படி ரெய்கி மற்றைய நாடுகளுக்குப் பரவுகிறது

சுயிரோ ஹயாசி (Chujiro Hayashi) என்பவரே முதன்முதலாக மிக்கவ் உசுய் இடம் இருந்து ரெய்கியைக் கற்றுக் கொண்டு ஜப்பானில் ஒரு ரெய்க்கி மருத்துவமனை ஆரம்பித்தார். அதன்பின் Hawayo Takata என்னும் பெண்மணி இவரிடம் இருந்து கற்றார். இவர் முதன் முதலாக ஜப்பான் நகரத்துக்கு அப்பாலுள்ள ஒரு பகுதியில் ஒரு மருத்துவமனையை ஆரம்பித்துப் பின் இதனை ஒரு கல்வி முறையாக மாற்றினார். அதன் மூலமாக அதிகமான மாணவர்களை உருவாக்கினார்கள். ரெய்கியின் ஆரம்ப கர்த்தா Mikao Usui என்பவர் 09.3.1926 இல் இந்த பஞ்சபூத உடலை விட்டபோது அவருடைய மாணவர்கள் 10 அடி உயரத்தில் 4 அடி அகலத்தில் ஜப்பானின் தலைநகரம் ரோக்கியோவில் ஒரு நினைவு ஸ்தூபியை எழுப்பினார்கள். இந்த நினைவுச் சின்னமானது Saihoji Temple இருக்கும் இடத்தில் உள்ளது.

இதனைப் பயிற்சி செய்து ரெய்கி மாஸ்டராக வருகின்ற போது எம்முடைய மனத்தின் திண்மையை, மன வலிமையை, வாழ்க்கைத் தரத்தை இந்த ரெய்கி அதிகரிக்கின்றது. இதனால், நல்ல உறக்கத்தை ஏற்படுத்த முடிவதுடன் வளர்சிதை மாற்றம் ஏற்படும். அவரவர் தம்முடைய நோய்களைத் தாமாகவே சுகமாக்க முடியும். உடலுக்குள் இருக்கும் நச்சுகளை வெளியேற்றுவது. நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவது, ரென்சன் படபடப்பை எப்படி நீக்குவது, மனதை எப்படி அமைதியாக வைத்திருப்பது. அல்லது அந்த பிரச்சினையை எப்படி எதிர்கொள்வது போன்ற ஆலோசனைகளை ரெய்கிக் கலைமூலம் பெற்றுக் கற்றுக் கொள்ளலாம். உடலின் ஆதார சக்கரங்களைக் இயக்குவதன் மூலமாக எமது சக்கரங்களில் உறுப்புக்களில் இருக்கும் தடைகளையும் நீக்க முடியும். வலிகள் வேதனைகள் ஏற்பட்டால் அதற்குரிய காரணிகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து விடுபட முடியும்.

எனவே ரெய்கி என்னும் அற்புதக்கலையைக் கற்று நாமும் பலனடையந்து பிறரையும் பாதுகாப்போம்.

# எங்கள் அதிசயத்தின் அகவை நாள்

படைப்பின் அதிசயம்
எங்கள் அம்மா
இதுவே எமது முதுசம்
மண்ணுதித்து இரண்டு எட்டுக்களில்
அழகியதொரு நல்லகவைத் தினம்...
இதுவே எமக்கு சுபதினம்

கரம் பற்றி காதலித்துக்
களிப்படைந்து சிற்பிகளாய்
பெற்றெடுத்த முத்துக்கள் மூன்று.
முத்துக்கள் மூன்றும்
ஈந்த மணிகள் ஆறு....
என்ன ஆச்சரியம் அவைகளுக்கு
துளிர்களாகவும் ஆறுதானே!
அதிசயத்திலும் அதிசயமாய்

நான்காவது முத்தாய் வந்திணைந்த
ஜோரான யோவும்.. முத்துக்களில்
மூத்த முத்தாக
மனதிருத்திய மாண்பு.

வசதி வேண்டாம்..
வாய்ப்பும் வேண்டாம்..
காலம் வரும் வரை
தாயவளின் காலடியே கதியென
கடல் கடந்தோம் கண்ணுக்குள்
வைத்துப் பார்க்க கங்கணம்
கட்டினோம்..

உங்கள் கண்களுக்கு எதிரில்
காத்திருந்து களிக்கும் கணங்கள்
கடவுள் எமக்குத்தான் தந்தி
ருக்கின்றார் என்று சற்று மிதப்பும்
கொண்டோம்.

அம்மா இறைசித்தம்
இந்த அகவை நாளில் மட்டுமல்ல
உங்கள் காலம் வரை
கண்ணுக்குள் வைத்துப் பார்க்கும்
பேறு கிடைக்க எமக்கு
ஆசி தாருங்கள்....

அன்பு மகள், மருமகன்
யோ. சாந்தி. பருத்தித்துறை.




திருமதி. லோகநாயகி ஸ்ரீஸ்கந்தராஜா
20.07.2025

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# சிவபூமி திருவாசக அரங்கம் திறந்து வைக்கப்பட்டது











நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு பக்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சிவ பூமி திருவாசக அரங்கம் இன்று 14.07.2025 திறந்து வைக்கப்பட்டது.

அவுஸ்ரேலியாவில் இருந்து வருகை தந்த வைத்திய நிபுணர் மனோமோகன் சிகௌரி தம்பதிகள் மற்றும் கௌரவ வட மாகாண ஆளுநர் அவர்களினால் இன்று திறந்து வைக்கப்பட்டது. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்விற்கு,ஏராளமான விருந்தினர்கள், கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு பக்கத்தில் மிக அற்புதமாக கலை வேலைப்பாடுகள் மற்றும் நவீன வசதிகளுடன்.புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அரங்கு எதிர்காலத்தில் கலைகளுக்கும் சயம வளர்ச்சிக்கும் பெருந் தொண்டாற்றும் என உறுதியாக நம்பலாம்.வைத்திய கலாநிதி.சிவகௌரி மனோமோகன் அவர்கள் தனது பெற்றோர்களான வைத்திய கலாநிதி. த.சண்முகநாதன்(முன்னாள் பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலை) அருந்ததி நினைவாக இந்த அற்புதமான சிவபூமி திருவாசக அரங்கத்தை கட்டி தந்துள்ளார். எவ்வித கட்டணங்களும் இல்லாமல் முற்றிலும் இலவசமாக சமய மற்றும் கலைப் பணிகளுக்காக இந்த அரங்கினை பயன்படுத்தி கொள்ள முடியும்.







# அற்புதம் ஒன்று நிகழ்ந்ததென்பேன்













நிரா சுரேஷ் (இங்கிலாந்து)





## "கதிரைவேற் பெருமானே கருணை தேவே" நாட்டிய நாடகம்"

"கதிரைவேற் பெருமானே கருணை தேவே" நாட்டிய நாடகம் கலைரசிகர்கள் அரங்கம் நிறந்திருக்க இனிதே 20.07.2025 சனிக்கிழமை கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மாண்புமிகு திரு. சந்தோஷ் ஜா அவர்கள் பிரதம விருந்தினராக நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்கள்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பெயரன் மதிப்பிற்குரிய ஞானபாநு டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயா அவர்களின் இசையில், அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனர் "கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்களின் நெறியாள்கையில், பேராசான்கள் முதல் சிறு குழந்தைகள் வரை மேடையில் இந்திய இலங்கைக் கலைஞர்கள் அனைவரும் இணைந்து



கதிர்காமக் கந்தனின் புராண வரலாறுக் கதைகளை முத்தமிழ் சுவைபட, கண் வழி, செவி வழி சென்று கண்ணீர் சொரிய மெய் மறக்கவைக்க மிகச்சிறப்பாக நாட்டிய நாடகம் இடம்பெற்றது.

அரங்க மண்டபத்திலும், மேடையிலும் நிறைந்திருந்த கலைஞர்களும், கலாரசிகர்களும், உணர்வில் ஒன்றாகி ஒன்றிப்போன காட்சியைக் காணமுடிந்தது. இந்த நாட்டிய நாடக நிகழ்ச்சி மேடையில் சில மணித்தியாலங்கள் நடைபெற்றது என்றாலும், மேடைக்குப்பின்னால் ஒத்திகை மணிக்கணக்கு அல்ல நாள்கணக்காக, வாரக்கணக்காக, மாதக்கணக்கில் நடைபெற்றது. அதன் விளைவாகத்தான் இப்படி ஒரு காவியம் படைக்க முடிந்தது. கலாசூரி திவ்யா சுஜேன் வாழ்கைப்பயணத்தில் இன்று நடந்தது ஒரு அற்புதமான தருணம். உண்மையில் அற்புதம் ஒன்று நிகழ்ந்ததென்பேன்.

**அத்தருணம் கிட்ட உழைத்த அனைத்துக் கலைஞர்களுக்கும் வெற்றிமணி யின் வாழ்த்துக்கள்**

# யேர்மனியில் கலைவிளக்கு சு.பாக்கியநாதன் அவர்களின் பவளவிழாவும் 'வேர்களும் பூக்கின்றன' நூல் வெளியீடும்




யேர்மனியில் நாற்பது வருடங்களுக்கு மேலாக தமிழ், கலை, இலக்கியம், மற்றும் பொதுநலச் சேவை என இடைவிடாது ஆற்றிவரும் கலைவிளக்கு சு.பாக்கியநாதன் அவர்களின் பவளவிழா 12.07.2025 சனிக்கிழமை டோட்முண்ட் நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழா யேர்மனியில் தமிழர் அரங்கம், மற்றும் ஊடகங்களான வெற்றிமணி பத்திரிகை, அகரம் சஞ்சிகை, தமிழ்ரைம்ஸ் யாவும் இணைந்து மிக சிறப்பாக முன்னெடுத்திருந்தன. பவளவிழா நாயகன் சு.பாக்கியநாதன்,திருமதி பாக்கியநாதன் தம்பதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் மு.நித்தியானந்தன் கலந்து சிறப்பித்தார்.

மாலை 4.00 மணிக்கு அரங்கத்தில் மக்கள் எழுந்து நின்று கரவொலி செய்ய பவளவிழா நாயகனும், பிரதம விருந்தினரும் மண்டபத்திற்குள் மக்கள் புடைசூழ அழைத்து வந்தனர். மங்கல விளக்கேற்றல், அக வணக்கம் இவற்றுடன் விழா ஆரம்பமானது. வரவேற்புரை திரு ஏலையா க.முருகதாசன் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து கனகசபைகலாயம், எசன் தமிழ் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடன நிகழ்வுகளுடன் விழா களைகட்டத் தொடங்கியது. நடனம் ஆடிய செல்விகள் பவளவிழா நாயகனிற்கு மாலை அணிவித்து வரவேற்று மகிழ்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து விழாவின் சிறப்பினை அறிவிப்பாளர்கள் அவைத்திலகம் பாலா, மற்றும் நடன ஆசிரியர் சாந்தினி துரையரங்கன் ஆகியோர் அழகு தமிழில் பவளவிழா நாயகன் சு.பாக்கியநாதன் அவர்களை மேடைக்கு அழைத்தனர். அவர்களைத் தொடர்ந்து சிறப்புரைகள் வழங்க தமிழர் அரங்கம் பொறுப்பாளர் எழுத்தாளர் வி. சபேசன், வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன், அகரம், சஞ்சிகை ஆசிரியர் இதழியல் கலை வேள் த. இரவீந்திரன், தமிழ் ரைம்ஸ் பிரதம ஆசிரியர் திரு செ.தவா. ஆகியோரை அழைத்தனர்.

மேடையில் நாயகன் அமர்ந்து இருக்க வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் மு.க.சு சிவகுமாரன் அவர்கள் தலைமையேற்று நெறிப்படுத்தினார். சிவகுமாரன் 1975ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பித்தபோது முதல் தொகுதி மாணவர்களில் ஒருவரான திரு.சு.பாக்கியநாதன் அவர்களின் சிறப்பு இயல்புகளை எடுத்து உரைத்தார். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியுடன் தன் பட்டப்படிப்பையும் முடித்தவர் திரு. பாக்கியநாதன் என்றார். எழுத்தாளர் வி. சபேசன் அவர்கள் யேர்மனியில் ஒவ்வொரு கல்வி கலை சார்ந்த செயல்களுக்கும் முக்கியமான ஒருவராக பாக்கியநாதன் இருந்துள்ளார். என்றார். அடுத்து உரையாற்றிய அகரம் சஞ்சிகை ஆசிரியர் திரு.த. ரவீந்திரன் பாக்கியநாதன் அவர்களின் கனிவான பேச்சையும் செயலையும் எடுத்துரைத்தார். தமிழ் ரைம்ஸ் ஆசிரியர் திரு.செ. தவா தமிழ் ரைம்ஸ் தொடர்ந்து வெளி வர முக்கிய காரணம் திரு பாக்கியநாதன் அவர்களின் உண்மையான உழைப்பு என்றார்.

அடுத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் மு. நித்தியானந்தன் அவர்கள். உரையாற்றினார். அவர் தன் உரையில் 1976,1977 ஆண்டு காலப்பகுதியில் திரு பாக்கியநாதன் அவர்கள் மாணவனாக இருந்தபோது அவரை நன்கு அறிவேன். அந்தக்காலம் மாணவர்கள் மாணவிகள் சிறகடித்து திரிந்த அழகிய காலம். குறிப்பாக மாணவிகள் சேலைகளுடன் வரும் அழகு இதனை இனி என்றும் காணமுடியாது. பரமேஸ்வராக் கல்லூரியாக இருந்ததை ஒரு பல்கலைக்கழகம் ஆக கட்டியெழுப்பியதில் முக்கி பங்காற்றியவர்கள் மாணவர்களும் என்றால் மிகையாகாது. படிப்போடு ஒரு பல்கலைக்கழகத்திற்கு எது எது தேவை என்பதை உணர்ந்து செயற்பட்டனர். அந்தக்காலத்தில் வெளியிடத்து மாணவர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் தமது வீடுகளில் தங்க ஒரு அறை கொடுக்க மாட்டார்கள். பயப்படுவார்கள். அந்தநேரம் திரு பாக்கியநாதன் அவர்கள் வீடு வீடாக சென்று கதைத்து வெளிமாநில மாணவர்களுக்கு இருக்க வீட்டு வசதிகள் செய்து கொடுத்துள்ளார். அவரது சேவை இன்றும் யேர்மனியிலும் தொடர்கிறது. யாழ்பாணம் பல்கலைக்கழகம் பொன் விழா காணும் நேரம் இங்கு இவர் பவளவிழா காண்பது மேலும் சிறப்பு. என்றார்.



ஆடற்கலாலயம் ஆசிரியர் நிமலன் சத்தியகுமார் அவர்களின் மாணவி மாயா மகீரா ஆனந்தராஜாவின் நடனம், திருமதி மீனா. உதயா அவர்களின் பாடல் இடம்பெற்றது. அதனை தொடரந்து வெற்றிமணி பத்திரிகையின் 31வது வெளியீடாக “வேர்களும் பூக்கின்றன“ என்ற நூல் வெளியீட்டு செய்யப்பட்டது. தொடர்ந்தது சலங்கை ஒலி நர்த்தனாலயம் திருமதி சாவித்திரி சரவணன் அவர்களின் மாணவிகள் அக்சரா ஜதீஸ், ஆதனா குகபிரகாஸ் ஆகியோரின் நடனம் இடம்பெற்றது.வேர்களும் பூக்கின்றன என்பது வித்தியாசமான தலைப்புடன் நூலின் சில பகுதிகளை ஆவணப்படமாகவும் காட்சிப்படுத்தியிருந்தார் வெற்றிமணியாசிரியர். அடுத்து தமிழர் அரங்கம் மாணவர்களின் நடனம் இடம்பெற்றது. புதிய தொழில்நுட்ப உத்தியில் திரு.சபேசன் அவர்களின் இயக்கத்தில் திரு. சிவவினோபனின் தொகுப்பில் “மனிதருள் மாணிக்கம்“ என்ற பெயருடன் ஆவணப்படம் வெளியிடப்பட்டது.பின்னர் மனிதருள் மாணிக்கம் என்ற விருதினை விழாக்குழுவினர் திரு பாக்கியநாதன் அவர்களுக்கு வழங்கி மாண்பேற்றினார்கள். அடுத்து பவளவிழா நாயகன் பற்றிய உரையில் தமிழ் மணி திருமதி.நகுலா.சிவநாதன், திரு. எழுத்தாளர் சுப்பிரமணியம், தமிழருவி வானொலி நயினை விஜயன், மண் சஞ்சிகை ஆசிரியர் வ.சிவராஜா, யேர்மனி தமிழ்க்கல்விச்சேவை திரு.ஜீவகன், ஆன்மிகச் சொற்பொழிவாளர் திருமதி கரிணி கண்ணன், யேர்மனி டோட்முண்ட் பெண்கள் அமைப்பு திருமதி கலைநிதி சபேசன் ஆகியோர் உரையாற்றினர். அடுத்து தமிழர் அரங்கம் மாணவர்களின் நடனம் இடம்பெற்றது.

விழாவில் கலந்து கொண்ட உறவுகள், நட்புகள் பலர் புடைசூழ்ந்து வாயாரா வாழ்த்தி, வாழ்த்துப்பாக்கள் வழங்கி, பொன்னாடைகள் அணிவித்து , பூங்கொத்துகள் கொடுத்துதங்கள்அன்புபரிசுகளைவழங்கியிருந்தமை கண்ணுக்கு நல் விருந்தாக அமைந்திருந்த போது இராப்போசனமும் உண்டிக்கு நல்விருந்தாக பரிமாறப்பட்டது. இறுதியில் பவளவிழா நாயகனின் ஏற்புரை இடம் பெற்றது. தன் உரையில் 'தான் செய்த சிறு பணிக்கு நீங்கள் காட்டும் அன்பு என் தளர்ந்த நரம்புகளை மேலும் முறுக்கேற்றி தைரியம் தருகிறது“ என்றார்.

செய்தி.சாந்தினி துரையரங்கன்



Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540

# யேர்மனியில் கலைவிளக்கு சு.பாக்கியநாதன் அவர்களின் பவளவிழாவும் 'வேர்களும் பூக்கின்றன' நூல் வெளியீடும்


















# இலண்டன் பாராளுமன்றத்தில் தமிழ் அறிஞர்களின் விருதுவிழா

ஆலந்தூர் கோ.மோகனரங்கன் தமிழ் ஆய்வு மையம் - சென்னை, குராய்டன் தமிழ் சங்கம் -இலண்டன், இலண்டன் கோல்ட் ஸ்மித் பல்கலைக்கழகம் இணைந்து செந்தமிழ் சான்றோர்க்குப் பெருமை சேர்க்கும் விழா கடந்த ஜுன் மாதம் 18ஆம் திகதி இலண்டன் வெஸ்மினிஸ்ரர் ஹவுஸ் சதுக்கத்தில் அமைந்துள்ள பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மூத்த தமிழ் மொழியின் பண்பாடு, கலாசாரம், தமிழ் மொழியின் ஆழ்ந்த ஞானம் என்று செந்தமிழுக்குப் பெருமை சேர்க்கின்ற பங்களிப்புக்களைச் செய்கின்ற அயலகத் தமிழர்களான 100 பேராளர்களை 24 நாடுகளில் இருந்து அழைத்திருந்தனர். அவர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரமுகர்களின் கைகளினால் கேடயங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இ,ந்நிகழ்ச்சியினைப் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களான சியோபினி மக்டோனா, நடாஷா அயோர்ன்ஸ், குரோய்டன் மாநகராட்சி மன்றத்தின் பிரதி மேயர் அப்பு ஸ்ரீநிவாசன், ஆ.கோ.மோ. தமிழியல் ஆய்வு மையத்து முனைவர் பாட்டழகன், கோல்ட் ஸ்மித் பல்கலைக்கழக திரு.கே.சிவாப்பிள்ளை ஆகியோர் ஒழுங்கு படுத்தியிருந்தனர். திரு.அப்பு ஸ்ரீநிவாசன் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். முனைவர் பாட்டழகன் வரவேற்புரையாற்றினார். நன்றியுரையை அகிலன் பாட்டழகன் அவர்கள் வழங்கினார்.

இலண்டன் பாராளுமன்றத்தில் தமிழ் மொழி வாழ்த்து இசைக்கப்பட்டு விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது பெருமையாக இருந்தது. பிரிட்டிஸ் கொமன்வெல்த் விவ கார அமைச்சர் ஸ்டீவ் ரீட், பாராளுமன்ற உறுப்பினர் ஜாஸ் அதுவெல், நடாஷா அயோர்ன்ஸ்,- குரிண்டர் சிங்,முதல் தமிழ் எம்.பி. உமா குமரன், மாநகராட்சி மேயர்கள், கவுன்சிலர்கள், வழக்கறிஞர்கள்,கல்வியாளர்கள், கலைஞர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துச் சிறப்புரையாற்றினார்கள். திரு.விசு செல்வராஜா–பிரான்ஸ், திரு. சுப்பையா ராமு - சிங்கப்பூர், திரு. சதீஸ் சிவலிங்கம் – இலங்கை, திரு. ராட்டோ முத்திரட்டினம் - மலேசியா, திருமதி. பிரேமளா நாகேஸ்வரராஜ் – தென் ஆபிரிக்கா, திருமதி சந்திரகௌரி சிவபாலன் - ஜெர்மனி, திரு. ராஜசுந்தரராஜன்–மொரீசியஸ். திரு. பி.எஸ். அகிலன் - இந்தியா,திருமதி.பி.சங்கமித்திரை– தமிழ்நாடு ஆகியோர் ,ந்நிகழ்ச்சியின் அயலக ஒருங்கிணைப்பாளர்களாவர்.





ஜெர்மனி நாட்டிலிருந்து சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் சிறப்பு அதிதி பாராளுமன்ற எம்.பி. நாட்ஷா அயோர்ன்ஸ், குரொய்டன் மேயர் அப்துல் இஸ்லாம், குரோய்டன் மாநகராட்சி மன்றத்தின் பிரதி மேயர் அப்பு ஸ்ரீநிவாசன் ஆகியோர்களிடமிருந்து செந்தமிழ்ச் சான்றோர் விருதையும் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டார். விழா முடிவுற்றதும் அனைத்து பேராளர்களும் இல்பார்ட் நகரில் அமைந்திருக்கும் பிரபா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டதுடன் அனைவருக்கும் கலைநிகழ்வுகளும்,விருந்துபசாரமும் அளித்துக் கௌரவிக் கப்பட்டது. மனம் நிறைவான நிகழ்வான இவ்விழா அனைவருக்கும் அமைந்திருந்தது.


Allianz



Piratheeb Pathmanathan
Allianz
வாடிக்கையாளர்
0151 240 33 546

எங்களிடம் மாறினால் ஒவ்வொரு காப்புறுதியிலும் வருடம்
300 Euro க்கும் அதிகமான பணத்தினை சேமிப்பதற்கு நாங்கள் உதவுவோம்

Allianz Agentur
Edmund- weber-str, 204,44651 Herne

கார் காப்பீடு
ich habe ein Fahrzeug

முதலீடு
ich möchte geld anlegen

ஆரோக்கியம்
ich denke an meine gesundheit

பயணம்
uriaub

தொழில் வாழ்க்கை
Mein Berufsleben

திருமணம்
Ich werde heiraten

விலங்கு காப்பீடு
ich habe ein Haustier

ஓய்வூதியம்
ich tue etwas fur meine Rente

வீடு/ அபார்ட்மெண்ட் பாதுகாப்பானது
ich will Haus/ Wohnung absichern

குழந்தை
kind absichern

வீடு/ அபார்ட்மெண்ட் வாங்க
ich will haus/wohnung finanzieren

இறப்பு
Tod

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# ஆடி மாதமும் நம்பிக்கைகளும்

ஆடி மாதமானது தன்னகத்தே பல சிறப்புகளையும் காரணமறியா மனிதர்களால் பல குழப்பங்களையும் தன்னகத்தே கொண்டதாகும்.

ஒரு வருடத்தில், தை மாதப் பிறப்பு முதல் ஆனி மாத முடிவு வரை “உத்தராயணம்“ என்றும், ஆடிமாதப் பிறப்பு முதல் மார் கழி மாத முடிவு வரை “தட்சிணாயனம்“ என்றும் கூறப்படுகிறது. சூரிய சக்தியானது உத்தராயணத்தில் நேர்மறை சக்தியையும் தட்சிணாயனத்தில் எதிர்மறை சக்தியையும் கொடுக்கிறது.

ஆடி மாதம் முழுவதுமே சிறப்புதான். ஒரு ஆண்டு போக சம்பிரதாயம், யோக சம்பிரதாயம் என இரண்டாகப் பிரிப்பர். போக சம்பிரதாயம் என்பது தை மாதம் முதல் ஆனி வரை உள்ள காலம். யோக சம்பிரதாயம் என்பது ஆடி முதல் மார் கழி வரை. போக சம்பிரதாயக் காலத்தில் கல்யாணம், விருந்து, நிகழ்வுகள் என்று மகிழ்ச்சியாக இருக்கும் காலம். யோக சம்பிரதாயம் என்பது , யாகம், வழிபாடுகள், பிரார்த்தனைகள் செய்யக்கூடிய காலம். யோக காலத்தில் முதல் மாதம் ஆடி என்பதால் தெய்வீகப் பண்டிகைகள் அதிகம். ஆடி பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடி அமாவாசை, ஆடிப் பவுர்ணமி, ஆடித்தபசு, ஆடிப் பெருக்கு, ஆடிப்பூரம் என்று மாதம் முழுவதுமே விசேஷமாக உள்ளது. ஆடி மாதத்தில் சந்திரன் சொந்த வீட்டில் இருக்கிறார். அந்த சொந்த க்ஷேத்திரத்தில், சூரியனுடன் சம்பந்தம் ஏற்படும் பொழுது, அதற்கு விசேஷம் அதிகம் உண்டு.

ஆடி மாதத்தையொட்டி நிலவி வரும் சில நம்பிக்கைகளையும் அதற்கான காரணங்களையும் பார்ப்போம்.

### 1.ஆடி மாதத்தில் திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்வுகள் நடத்தக் கூடாது.

அந்நாட்களில் விவசாயத்தை நம்பித்தான் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது.






“ஆடிப்பட்டம் தேடி விதை‘ என்று பழமொழியே உண்டு. ஆடியில் விதை விதைத்தல், விவசாயம் செய்தல், துணி நெய்தல், குடிசைத் தொழில் செய்தல், போன்ற வருமானத்திற்கு வழி ஏற்படுத்திக் கொள்ளும் முக்கியமான வேலைகளில் ஈடுபடுவார்கள்.

ஆடியில் விவசாய வேலைகளைத் தொடங்கினால்தான் ஒருவருக்கு, பயிர் அறுவடை கார்த்திகை மற்றும் தை மாதத்தில் உண்டாகும். அந்தச் சமயத்தில் தான் கையில் பணமும் வர வாய்ப்பு இருக்கும். அதனால் இந்துக்களின் முக்கிய பண்டிகைகளான தீபாவளி, பொங்கல் மற்றும் திருமண வைபவங்களுக்குப் பணத்தட்டுப்பாடு இல்லாமல் இருந்து வந்தது.

ஆடி மாதம் விவசாயத்திற்காக செலவு செய்யும் காலமாக இருந்ததால் அந்தச் சமயத்தில் வேறு செலவுகள் செய்யப் பணம் இருக்காது. அதனால்தான் வீட் டில் நல்ல காரியங்கள் நடைபெறாமல் இருந்ததே ஒழிய, ஆடியில் திருமணங்கள் செய்யக் கூடாது என்று எந்த சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லை.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

இறைவனை வழிபடுவதற்காகவே ஒதுக்கப்பட்ட மாதம் என்பதாலும், இறை வழிபாடு செய்வதில் கவனம் சிதறலாம் அல்லது தடை படலாம் என்பதால் தான் திருமணம் உள்ளிட்ட பல்வேறு சுப நிகழ்ச்சிகள் இந்த மாதத்தில் நடத்தப்படுவதில்லை.

### 2.புதுமணத் தம்பதியரைப் பிரித்து வைத்தல்

ஆடி மாதத்தில் கர்ப்பம் தரித்தால் கோடை காலமான சித்திரையில் குழந்தை பிறக்கும்.சித்திரை மாதமானது அக்னி நட்சத்திம் என்னும் வெப்பமான மாதம் ஆகும். இம்மாதத்தில் குழந்தை பிறந்தால் பெரியம்மை போன்ற தோல் சம்பந்தமான நோய்கள் குழந்தையை எளிதில் தாக்கி உடல் பலவீனமடையும்.குழந்தைகள் அடிக்கடி நோய்வாய்ப்படும் என்பதால்தான் ‘சித்திரையில் குழந்தை பிறந்தால் சீரழியும்“ என்ற சொல்வழக்கும் உள்ளது. இதன் காரணமாக தான் ஆடிமாதத்தில் தம்பதியர் சேருவது நல்லதல்ல என்கின்றனர்.

### 3.மருமகன் ஆடி மாதத்தில் மாமியாரைப் பார்த்தால் மாமியாருக்கு ஆகாது

மேலே சொன்ன அதே காரணம்தான்.

இதற்கும். சித்திரையில் கருத் தரிப்பதைத் தவிர்ப்பதற்காகத் தாய் வீட்டிற்குக் பெண்களை அனுப்பும் வழக்கம் இருந்தது. மாமியார் வீட்டிற்கு பெண்களின் கணவர்கள் செல்வதைத் தவிர்ப்பதற்காக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. சித்திரையில் குழந்தை பிறந்தால் பிரசவித்த பெண்ணையும் பேரக் குழந்தையையும் பார்க்கும் மாமியாருக்குத்தான் சிக்கல் என்பதால் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

### 4.ஆடி மாதத்தில் குழந்தை பிறந்தால் ஆட்டிப் படைக்குமா?

ஒரு ஆண்டில் எந்த மாதம் வேண்டுமானாலும் குழந்தை பிறக்கலாம். இதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை.ஒருவரது வாழ்க்கையைப் பிறந்த மாதமோ, நட்சத்திரமோ, ராசியோ, கிழமையோ முடிவு செய்வதில்லை.அவர்கள் மதியே முடிவு செய்கிறது.ஆடி மாதத்தில் ஆண் குழந்தை பிறந்தால் ஆட்டிப் படைக்கும் என்பது எதுகை, மோனையுடன் அமைந்த பேச்சு வழக்கே ஆகும்.முன்னர் சொன்னது போல ஆடி மாதத்தில் பிறக்கும் குழந்தையால் வெயிலைத் தாங்க முடியாது ஏற்படும் நோய்த் தாக்கங்களால் பிறந்த போது உடனிருப்பவர்களை ஆட்டிப் படைக்கும் என்பதைக் கொண்டு கூறியிருக்கலாம். ஆடி மாதத்தில் பிறந்தவர்கள் நல்ல நிலையில் இருப்பதை நாம் எப்போதுமே பார்க்க முடியும்.

ஆடி மாதத்தில் குளிர் நாடுகளில் இடம்பெயர்ந்திருக்கும் எம்மூர் மக்கள் இதைப் பின்பற்றுவதால் எந்த நன்மையுமில்லை. நம் முன்னோர்கள் நம் நாடு மற்றும் அயல் நாடுகளின் காலநிலைக்கேற்ப வகுத்த சில முறைகளும் நம்பிக்கைகளும் எல்லாமே எல்லா நாட்டினருக்கும் பொருந்திப்போகாது என்பதைக் கருத்தில்கொண்டே நாம் இவற்றின் சரிபிழையை ஆராய்ந்து பின்பற்ற வேண்டும்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



## முகம் சுழித்துச் செல்லும் சுற்றுலாப் பயணிகள்

# ஆபத்தில் நாவலப்பிட்டி சேலம் பிரிட்ஜ் 95 ஆண்டு பழைமையான பாலம்

**(எஸ்.ரோஷன்) நாவலப்பிட்டி**

இயற்கையால் அழகுபடுத்தப்பட்டிருக்கும் எமது நாடு, ஒரு சில மனித செயற்பாடுகளால் சில நேரங்களில் அழகு குன்றிப்போவது வேதனைக்குரியது.

அதுவும் இயற்கையின் ஆசீர்வாதம் முழுமையாக கிடைத்திருக்கும் மலையகத்தின் அழகு சீர்கெட்டு வருவது இலங்கையர்களுக்கு மாத்திரமல்ல நாட்டுக்கு வருகை தரும் சர்வதேச சுற்றுலா பயணிகளையும் மனம் கோண வைக்கிறது.

அம்பகமுவ பிரதேச சபை நாவலப்பிட்டி நகர சபைக்குட்பட்ட சேலம் பிரிட்ஜ் பகுதியில் 95 ஆண்டுகால பழமையான பாரிய ரயில் பாலம் அருகில் அப்பகுதி மக்கள் குப்பைகளை கொட்டுவதால் குறித்த பாலத்தை சுற்றி வசிக்கும் மக்கள் மற்றும் ரயிலில் பயணிக்கும் பிரயாணிகள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் பாலத்தை கடக்க வேண்டியிருக்கிறது.

குறித்த பாலத்தினூடாக புகையிரத வண்டிகள் மெதுவாக செல்வதால் (அட்டன், தலவாக்கலை, பதுளை வரை) சுற்றுலா பயணிகள் குறித்த பாலம் மற்றும் அந்தப் அதனை சுற்றியுள்ள அழகை ரசித்து செல்லும் அதேவேளை, புகைப்படங்கள் பிடித்து செல்வது வழக்கம்.

தற்போது குப்பைகளை கொட்டி அசுத்தப்படுத்தியதன் காரணமாக சுறறுலாப் பயணிகள் முகம் சுழித்து செல்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ■

## யேர்மனியில்

# ஆடிக்கூழ் கூடிக் குடித்தோம்!



வ.சிவராஜா

**40 வருடங்களின் பின்பு அருமையான நிகழ்வு.. யேர்மனி-டியூஸ்பேர்க் நகரில் தமிழர் ஒன்றுகூடல்...**

ஆடிக்கூழ் என்னும் போது நாவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய பாடல்தான் நமக்கு எல்லாம் நினைவில் வரும் 'ஆடிப் பிறப்பிற்கு நாளைவிடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' என்று புலவர் பாடிய பாடலை நாம் பாடசாலையில் படித்தகாலங்களில் பாடி, ஆடி, கூடிக் கூழ் குடித்த ஞாபகம் நம்மில் அனேகமானோருக்கு உண்டு...

இது அந்த ஆடிக்கூழ் அல்ல...அதாவது நமது பிறந்த ஊர்களில் குடித்து மகிழ்ந்த மாமிசக்கூழ் பற்றியதாகும். யேர்மனி டியூஸ்பேர்க் நகரில் இருக்கும் தமிழர் விளையாட்டுக்கழகத்தினரும் பொது மக்களும் ஒன்றிணைந்து கூழ் குடித்த நிகழ்வு 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நகரத்தில் 20,25,30,35,40 வருடங்களாக தமிழ்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் இந்த வருடம் தான் மிகச்சிறப்பான முறையில் இந்தக் கூழ் குடித்து மகிந்தோம். இந்த வைபவம் முதன் முதலாக நடைபெற்றிருப்பது சிறப்பான விடயமாகும்.



சிறுவர்கள், இளையோர், குடும்பங்கள், முதியோர் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

தாவரங்கள், மரங்கள், பூ மரங்கள் செடிகள் சூழ்ந்த இயற்கையான சூழல். காலநிலையும் நமக்குச் சாதகமாகவே அமைந்திருந்தது. கூடிய எல்லோரும் அன்பாகவும் ஒற்றுமையாகவும் மகிழ்வாகவும் கூழ் குடித்தது எல்லோருக்கும் மகிழ்வைத் தந்தது.

குறிப்பாக பெண்களின் பங்களிப்பு அதிகம். பாராட்டுதலுக்குரிய விடயமாகும். பெண்களே அனைத்து வேலைகளையும் திட்டமிட்டு பொருட்களை வேண்டி சரியான முறையில் அனைவருக்கும் கூழ் உணவளித்து தமது திறனை வெளிப்படுத்தியிருந்தமை பாராட்டுதலுக்குரியதே.

இவற்றைவிட பலதரப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றது. அனைவரும் வயிராற கூழ் குடித்து, சிற்றுண்டிகள் உண்டு மகழ்ந்து பேரானந்தம். அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் போல கூடி மகிழ வைத்த விழாவின் ஏற்பாட்டாளர்களின் உழைப்பும் சிறப்பே. அவர்களுக்கும் வாழ்த்துக்கள்!...

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மனிதனின் இயலாமையை நீக்குவதற்காக

இரண்டாம் உலகப்போருக்குப்பின்னர் நாட்டுப்பற்றை போதிக்கும் சூப்பர் ஹீரோக்கள் மீதான மோகம் மக்களிடையே குறைய ஆரம்பிக்கவே துப்பறியும் மற்றும் கிரைம் ஹீரோக்களை நோக்கி காமிஸ் புத்தகங்கள் தமது பார்வையை திருப்ப, அதேநேரத்தில் வானொலி, தொலைக்காட்சி தொடர் என படிப்படியாக முன்னேறி ஹாலிவூட்டில் கோடிகளை அள்ளிக்குவிக்கும் திரைப்படங்களாக,அனிமேஷன் கார்டூன்களாக இந்த சூப்பர் ஹீரோக்களின் கதைகளின் வெற்றி அசாத்திய வளர்ச்சியினை அடைந்து வீறுநடை போடுகின்றதெனலாம். கணினி விளையாட்டுகள், காமிக்ஸ் மற்றும் கார்ட்டூன் ஹீரோக்கள் என இவை அனைத்தும் நிஜ உலகத்திலிருந்து குழந்தைகளை அழைத்துச் செல்லும் கனவு தொழிற்சாலையின் ஒரு பகுதியாகும். ஒருவரைப் பின்பற்ற முயற்சிக்கும் ஒரு குழந்தையின் ஆசை எப்போதும் இயல்பானது, ஆனால் நிஜத்திற்கும் ரீலுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்ளவியலாத குழந்தைகள் சிலர், எல்லைமீறி சூப்பர் ஹீரோக்களின் மேனரி



ஸத்தோடு ஒன்றநினைக்கும் போதுதான் பிரச்சினையே எழுகிறது. உதாரணத்திற்கு சூப்பர் ஹீரோ செய்யும் அசாத்திய விடயங்களை தானும் செய்துபார்க்க முயலுவது அல்லது தன்னை சூப்பர் ஹீரோ காப்பாற்ற வருவார் என்கிற நம்பிக்கையில் ஏடாகூடமாக எதையாவது செய்துவிடுவது போன்ற விடயங்களை தவிர்க்கும் வண்ணமான விழிப்புணர்வுகளை குழந்தைகள் மத்தியில் ஏற்படுத்தும் பொறுப்பு நிச்சயம் பெற்றோர்களுக்கும் உண்டு. "நிஜவாழ்வில் உங்கள் ஹீரோ தினமும் நீங்கள் காணும் ஒருவரே, அது நீங்களாகவும் இருக்கலாம். எனவே உண்மையான ஹீரோவாக உங்களை நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள் "எனும் வார்த்தைகள், குழந்தைகளை தன்னம்பிக்கையோடு வழிநடத்தகூடும் . ■





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# பகலில் குட்டித் தூக்கம் நல்லதா?

பகல் தூக்கம் கூடாது என்ற நம்பிக்கை எமது சமூகத்தினருக்கு பெருமளவு இருக்கிறது. குட்டித் தூக்கத்தைக் கோழித் தூக்கம் என்றும் சொல்வார்கள். பகல் தூக்கமானது சோம்பேறித்தனத்தைக் குறிக்கும். குறிக்கோளற்ற வாழ்க்கைப் பயணத்தையும் குறிப்பதாகவும் பலரும் நம்புகிறார்கள். பகலில் குட்டித் தூக்கங்களானது குழந்தைகள், நோயாளிகள் மற்றும் வயோதிபர்களுக்கே ஆனது. ஆரோக்கியமானவர்களுக்கு அல்ல என்பது வேறு சிலரது எண்ணம்.அதனால் தான் பலருக்கு இது கெட்ட பழக்கமாகத் தெரிகிறது. ஆனால் அது தவறான நம்பிக்கை. பகலில் கொள்ளும் குட்டித் தூக்கங்கள் நன்மையளிக்க வல்லது என்பதே மருத்துவ உண்மையாகும்.

மனிதன் ஒரு பாலூட்டி. அவன் பகல் முழவதும் வேலை செய்கிறான். இரவில் மட்டும் தூங்குகிறான்.ஆனால் 85 சதவிகிதத்திற்குக்கு மேலான பாலூட்டி இனங்கள் அவ்வாறு இல்லை.இடையிடையே குறுகிய காலங்களுக்கு பகல் முழுவதும் தூங்கி விழிக்கின்றன. இதனை Polyphasic sleepers என்பார்கள்.ஆனால் மனிதனானவன் குறைந்தளவாக உள்ள மிகுதிப் பாலூட்கள் போல Monophasic sleepers ஆக இருக்கிறான்.ஆனால் இது மனிதனுக்கு இயற்கையாக விதிக்கபட்டதாகத் தெரியவில்லை. உதாரணத்திற்கு குழந்தைகள் மற்றும் முதியவர்கள் குறும் தூக்ஙகள் கொள்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டலாம்.

இயற்கை எவ்வாறு இருப்பினும் இன்றைய காலகட்டத்தில் மனிதர்கள் நீண்ட நேரம் இரவில் விழித்திருக்க வேண்டிய தேவைகள் அதிகரித்துள்ளன. இதனால் பகலில் குட்டித் தூக்கம் போடுவது உடலுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் கொடுக்கிறது.வாழ்க்கையில் உச்சங்களை எட்டிய பலர் பகலில் குட்டித் தூக்கம் செய்தவர்களாக இருந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு, நெப்போலியன், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், தாமஸ் எடிசன் மற்றும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் போன்றவர்களைக் குறிப்பிடுவார்கள்.

## குட்டித் தூக்கத்தின் நன்மைகள்

குட்டித் தூக்கத்தால் அவதானிப்பும் விழிப்புணர்வும், வினைத்திறனும், அதிகரிக்கின்றன. அதனால் தவறுகளைத் தவிர்க்கவும், விபத்துகளிலிருந்து தப்பிக்கவும் முடியும். அமெரிக்காவின் நாசாவில் செய்யப்பட்ட ஒரு ஆய்வானது 40 நிமிடங்கள் கொள்ளும் குட்டித் தூக்கமானது ஒருவது செயற்திறனை 34 சதவிகிதத்தால் அதிகரிக்கிறது என்கிறது. ஆனால் அதேநேரம் விழிப்புணர்வானது 34 சதவிகிதத்தால் அதிகரிப்பது குறிப்பிடத்தக்கது. குட்டித் தூக்கத்திற்கு பின்னர் கொஞ்ச நேரத்திற்கு மாத்திரமின்றி மேலும் பல மணிநேரங்களுக்கும் விழிப்புணர்வு சிறப்பாக இருக்கும்.அதீத பகல் தூக்கமும் உடல் தளரச்சியும் காரணம் தெரியாமல் ஏற்படுபவர்களுக்கு (narcolepsy) நேர ஒழுங்கு வரையறை செய்யப்பட்ட குட்டித் தூக்கங்கள் உற்சாகமாகச் செயற்படக் கைகொடுக்கும். உளவியல் ரீதியான அனுகூலங்கள் அதிகம் கிட்டும். குட்டி விடுமுறை கிட்டிய மகிழ்ச்சி ஏற்படும். சொகுசுணர்வும் கிட்டலாம். சிறிய ஓய்வும், புத்துயிர்ப்பும் பெற உதவும்.

## அவதானிக்க வேண்டியவை

எந்தளவு நேரம் கொள்ள வேண்டும், எவ்வாறு கொள்ள வேண்டும், எத்தகைய இடம் உசிதமானது போன்ற பல விடயங்கள் சரியாக இருந்தால்தான் இந்தத் குட்டித் தூக்கம் விரும்பிய பலனைக் கொடுக்கும்.

குட்டித் தூக்கமானது 30 நிமிடங்களுக்கு மேற்படாதிருப்பது அவசியம். நீண்ட நேரம் தூங்குவதானது சோம்பல் உணர்வை விதைத்துவிடும். அத்துடன் இரவுத் தூக்கத்தையும் கெடுத்துவிடும்.

தூங்குவதற்கு அமைதியான, சப்தங்களற்ற, காற்றறோட்டமும் வெக்கையுமற்ற வசதியான இடம் முக்கியமானது. மங்கலான ஒளியுள்ள இடமும் விரும்பத்தக்கது.

குட்டித் தூக்கத்திற்கான சரியான நேரத்தைத் தேரந்தெடுங்கள். மாலையில் இரவை அண்டிய நேரம் நல்லதல்ல. இரவுத் தூக்கத்தைக் குழப்பிவிடும். அதேபோல காலையில் நேரத்தோடு தூங்க முயன்றால் உங்கள் உடலானது தூக்கத்திற்குத் தயாராக இருக்காது.

உங்கள் உடல்தான் உங்கள் பகல் தூக்கத்திற்கான நேரத்தைச் சரியாகக் காட்ட முடியும். வழமையாக நீங்கள் எந்த நேரத்தில் சோர்ந்து உற்சாகமிழக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து குட்டித் தூக்கத்திற்கான நேரத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

## குட்டித் தூக்கங்களை நாம் வகைப்படுத்தவும் முடியும்

திட்டமிட்ட முறையில் செய்யப்படும் குட்டித் தூக்கம் உதாரணமாக நீண்ட நேரம் விழித்திருந்து வேலை செய்ய வேண்டியிருக்கும் எனக் கருதினால் அவ் வேளையில் தூக்கம் வருவதைத் தடுக்குமுகமாக முற்கூட்டியே குட்டித் தூக்கம் போடுவது. ஷிப்ட் முறையில் வேலை செய்வதால் தினசரி ஒரே நேரத்தில் தூங்க முடியாவர்களுக்கும் இது பொருத்தமாக இருக்கலாம்.

அவசரத் தூக்கம் சடுதியாகக் களைப்புற்று ஒருவர்தான் செய்து கொண்டிருக்கும் வேலையைத் தொடர முடியாதிருந்தால் அவ்வேளையில் சிறுதூக்கம் போடுவது. பொதுவாக நீண்ட தூரம் வாகனம் செலுத்துவோர் தூக்கம் கண்ணைச் சுழற்றுவதால் பாதையோரம் வாகனத்தை நிறுத்திவிட்டு சற்று நேரம் தூங்குவதை இதற்கு உதாரணம் காட்டலாம். இயற்றையின் தூக்க அழைப்பை மறுத்து தொடர்ச்சியாக வாகனத்தைச் செலுத்தும் நீண்ட தூர பஸ் சாரதிகள் தம் உயிரையும் பயணிகளில் உயிரையும் காவு கொள்ளும் பரிதாபங்களுக்கு இலங்கையில் குறைவில்லை. நெருப்பு, எஜ்சின், உயரம் போன்ற ஆபத்தான வேலைகளில் ஈடுபடுவோருக்கு இது நிச்சயம் உதவும்.

பழக்கதோசத் தூக்கம் – முற்கூறிய பேராசிரியரின் தூக்கத்தை இதற்கு உதாரணம் காட்டலாம். பொதுவாக மதிய உணவின் பின்னர் பலரும் இவ்வாறு குட்டித் தூக்கம் போடுவதுண்டு.

## அனைவருக்கும் வேண்டியதுமில்லை

இருந்தபோதும் குட்டித் தூக்கங்கள் அனைவருக்கும் அவசியம் என்பதில்லை. இரவில் போதிய தூக்கமும் பகலில் வேலை நெருக்கடியினறி ஓய்வாக இருப்பவர்களுக்கு தேவைப்படாது. அத்தகையவர்களுக்கு குட்டித் தூக்கமானது இரவுத் தூக்கத்தைக் கெடுத்துவிடும்.தனது வீட்டில், தனது அறையில் அதுவும் தனது கட்டிலில் படுத்தால்தான் சிலருக்கு தூக்கம் வரும். வேறு எங்கு படுத்தாலும் தூங்கவே முடியாது. அவர்களுக்கு இது தோதுப்படாது. இன்னும் சிலருக்கு எவ்வளவுதான் களைப்பு ஏற்பட்டாலும் பகலில் தூக்கம் வரவே வராது.

அவர்களும் குட்டித் தூக்கம் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.இவற்றைத் தவிர இருதய வழுவல் நோய் (Heart failure) வரக் கூடிய சாத்தியம் உள்ளவர்களுக்கு குட்டித் தூக்கம் நல்லதல்ல என ஒரு மருத்துவ ஆய்வு கூறுகிறது. அதற்கான சாத்தியத்தை குட்டித் தூக்கம் அதிகரிக்கலாம் என்கிறார்கள். ■



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## 'நான் பார்த்ததிலேயே அவள் ஒருத்தியைத்தான் நல்ல அழகி என்பேன் நல்ல அழகி என்பேன்'



# கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவியின் சாதனை பயணம்!

பரதக்கலை, வாய்ப்பாட்டு, மேடை நாடகம் என்பன போன்ற கூடுதல் முகவரிகள் ஏதுமில்லை. நடிப்பில் வழி காட்டுவதற்குப் போதிய பின்புலமும் இல்லை. ஆனாலும் தென்னகத் திரையுலகின் உச்சாணிக் கொம்பைத் தொட்டவர் சரோஜாதேவி.அதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள், கலையின் மீதான பக்தியும், சலியாத உழைப்பும். எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி என்ற தமிழ்ச்சினிமாவின் மூவேந்தர்களும் கொண்டாடி மகிழ்ந்த ஒரே அபூர்வத்தாரகை. 'கன்னடத்துப் பைங்கிளி, அபிநய சரஸ்வதி என்று தமிழ்த் திரையுலகத்தால் கொண்டாடப்பட்ட நடிகை சரோஜாதேவி. நடித்த முதல் படம் 'தங்கமலை ரகசியம்' 1957 ஜூன் 29 அன்றுதான் வெளியானது. அக்காலத்தில் சூப்பர் ஸ்டார் ஆக இருந்த எம்.ஜி.ஆருடன் சரோஜாதேவி இணைந்து கதாநாயகியாக 26 படங்களில் நடித்திருக்கிறார்.

அவருடன் மட்டுமின்றி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காதல் மன்னன் ஜெமினி கணேசன் ஆகியோருடனும் பல படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார்."திரையுலகில் என்னுடைய துரித வளர்ச்சிக்குக் காரணம் எம்ஜிஆர் என்ற மூன்றெழுத்து மந்திரம்" என்று சொல்லியுள்ளார் சரோஜாதேவி. அத்தகைய பெருமை பெற்ற எம்ஜிஆரின் படங்கள் அதிகமாக விலை பேசப்பட்டதற்கும் சரோஜாதேவி முக்கியக் காரணமாக இருந்தார். மன்னாதி மன்னன் படச்சுவரொட்டிகளில் சரோஜாதேவியின் படம் இல்லாததால் விநியோகஸ்தர்கள், படப்பெட்டியைத் தூக்க மறுத்துப் பின் வாங்கினார்கள் என்ற ஒரு செய்தியும் உண்டு. 4 மொழிகளில் 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த பழம்பெரும் நடிகை சரோஜாதேவி, அவருடைய 87 வது வயதில் 14.07.2025 பெங்களூருவில் காலமானார். அவரை தமிழ்த்திரையுலகில் அறிமுகம் செய்தது யார் என்பதில் பெரும் போட்டியே இருக்கிறது.ஆனால் சிவாஜி நடித்த 'தங்கமலை ரகசியம்' படத்தில் நாயகியான ஜமுனாவிடம் தங்கமலை ரகசியத்தைச் சொல்லும் அந்தக் காட்சி தான் சரோஜாதேவியின் அறிமுகக் காட்சியாகும். ஆனால் சரோஜாதேவியை தமிழகமே 'யாரிந்த தேவதை' என்று கேட்க வைத்தது நாடோடி மன்னன் படம்தான். எம்ஜிஆர் இயக்கி தயாரித்த அவரின் சொந்தப்படமான நாடோடி மன்னனில் எம்ஜிஆருக்கு நாயகியாக நடிக்க முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டவர் பானுமதி. ஆனால் படப்பிடிப்பில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நாயகியாக நடிப்பதிலிருந்து பானுமதி விலகிக்கொள்ள, எம்ஜிஆருக்கு நாயகியாகும் வாய்ப்பு சரோஜாதேவிக்கு வந்தது. எம்ஜிஆர் தயாரித்து இயக்கி நடித்த அந்தப் படத்தில் சரோஜாதேவியின் அழகும், கொஞ்சும் குரலும் தமிழ் ரசிகர்களை கவர்ந்து இழுத்தது. அந்தப் படம்தான் அக்காலத்தில் ஒரு கோடி வசூலைத் தொட்டது. அதிலிருந்து வசூல் ராணியாகவே அவர் வலம் வந்ததார்.

'அன்பே வா'. பிரபல இயக்குநர் ஏ.சி. திருலோகச்சந்தர் இயக்கத்தில் வெளியான இந்தப் படம் முழுக்க முழுக்க சிம்லாவில் படமாக்கப்பட்டது. இந்த படத்திற்காக வாலியால் எழுதப்பட்ட 'நான் பார்த்ததிலேயே அவள் ஒருத்தியைத்தான் நல்ல அழகி என்பேன் நல்ல அழகி என்பேன்' என்ற பாடல், சரோஜா தேவிக்காகவே எழுதப்பட்ட வரிகளாக இருக்கும்.





இதே படத்தில்தான் 'ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்' பாடலும், அதில் எம்ஜிஆர் மற்றும் சரோஜாதேவியின் ஆடை, அணிகலன், அலங்காரம் அத்தனையும் அசல் ராஜா-ராணி போலிருக்கும்.

சிவாஜி புரடக்சன்ஸ் தயாரிப்பில் வெளியான முதல் படம் புதிய பறவை. சிவாஜியை ஒரு எதிர்மறை நாயகனாகக் காண்பிக்கும் வித்தியாசமான கதைக்களம் உள்ள அந்த 'காதல் த்ரில்லர்' படத்தை இந்திப்பட இயக்குநர் தாதா மிராசி இயக்கிருந்தார். படத்தின் இரு கதாநாயகிகளில் ஒன்றாக வந்த சரோஜாதேவி. பிரபல சிங்கப்பூர் தொழிலதிபர் கோபாலை காதலிக்கும் லதா என்ற கதாபாத்திரம். கோபாலின் முதல் மனைவி இறந்ததன் மர்மத்தை அறியும்போது சரோஜா தேவி உடைந்து உருக்குலைந்து 'கோபால் கோபால்' என்று கதறும் காட்சி அக்கால ரசிகர்களை காட்சிக்குள்ளேயே உறைய வைத்தது. அந்தப் படத்தில் அவர் உச்சரிக்கும் 'கோபால் கோபால்' என்பதை வைத்தே, நடிகர் விவேக் ஒரு திரைப்படத்தில் பெண் வேடத்துடன் சில காட்சிகளை வடிவமைத்திருப்பார். அந்த காட்சியும் எல்லோரையும் ரசிக்கவைத்தது. அதன் பின் அந்த 'கோபால்' வசனமே பலருக்கும் பல நேரங்களில் 'மீம் கண்டென்ட்' ஆனது.

பாலும் பழமும்!பீம்சிங் இயக்கத்தில் உருவான இந்தப் படத்திலும், சௌகார் ஜானகியும், சரோஜாதேவியும் இரண்டு கதாநாயகிகளாக நடித்தனர். சரோஜா தேவி, சாந்தி மற்றும் நீலா என்ற இரண்டு கதாபாத்திரங்களில் இரட்டை வேடத்தில் நடித்தார். அந்த இரண்டு பாத்திரங்களுக்கும் இடையிலும் தனது நடிப்பால் ஒரு பெரும் வித்தியாசத்தைக் காண்பித்திருப்பார்.இந்தப் படத்துக்கான விமர்சனத்தில் ஆனந்த விகடன், "நடிப்பிலே சிவாஜிக்கு ஈடு கொடுக்கிறார் சரோஜாதேவி.' என்று பாராட்டியது. தாய் சொல்லைத் தட்டாதே! எம்ஜிஆர்-சரோஜாதேவி இணையின் வெற்றிப் படங்களில் இதுவும் ஒன்று. 1961 தீபாவளிக்கு வெளியான இந்தப் படத்தை தேவர் பிலிம்ஸ் தயாரித்திருந்தது. மிகக்குறுகிய காலத்தில் எடுக்கப்பட்டு, மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற படம் இது.கல்யாணப்பரிசு வெள்ளிவிழாவுக்கு எந்த ஊருக்குமே வர இயலாது என்று கை விரித்த சரோஜாதேவி,இந்தப் படத்தின் 100 வது நாள் வெற்றிக்காக கோவை, மதுரை, திருச்சி,சேலம், தஞ்சாவூர், நெல்லை என பல ஊர்களுக்கும் எம்ஜிஆருடன் சென்றுள்ளார்.

ஸ்ரீதர் இயக்கத்தில் வெளியான கல்யாண பரிசு, அந்தக் காலத்தில் 'சூப்பர் டூப்பர் ஹிட்' அடித்த படம். அதில் காதல் மன்னன் ஜெமினி கணேசனுக்கு நாயகியாக வசந்தி என்ற பாத்திரத்தில் நடித்திருக்க வேண்டியவர் நடிகையர் திலகம் சாவித்திரி. ஆனால் அப்போது அவர் கர்ப்பமானதால் அந்தப் பாத்திரம், சரோஜாதேவியின் கைக்குவந்தது. தமிழே அறியாத சரோஜாதேவி ஒரு ரூபா என்பதை தமிழில் 'வரு ரூபா' என்றே திரும்பத் திரும்பச் சொல்லி, ஒரு நாளையும் ஏகப்பட்ட ஃபிலிமையும் தின்று ஏப்பம் விட்டதாக கோபு நகைச்சுவையாகச் சொல்வார்.அந்தப்படம் 25 வாரங்கள் ஓடி வெள்ளிவிழா கண்டது. ஜெமினியின் முதல் வெள்ளிவிழா படம் என்ற முறையில், அதிலிருந்து சாவித்திரிக்கு அடுத்ததாக ஜெமினியின் ஆஸ்தான நாயகியாக சரோ இடம் பிடித்தது கல்யாண பரிசில் இருந்துதான். கடந்த 1997 ஆம் ஆண்டில், சிவாஜி கணேசனுடன் விஜய் இணைந்து நடித்த 'ஒன்ஸ்மோர்' படத்தில், இந்த படத்திலிருந்து எடுக்கப்பட்ட சில காட்சிகள், பயன்படுத்தப்பட்டன. ஆதவன்! சரோஜா தேவி தமிழில் கடைசியாக நடித்த படம் இதுதான். சூர்யா-நயன்தாரா இணையாக நடித்த இந்த படம், 2009 ஆம் ஆண்டில் வெளியானது.சரோஜா தேவி மறைவுக்கு இரங்கல் தெரிவித்துப் பேசிய நடிகர் சிவகுமார், "வழக்கமாக திரைத்துறையை விட்டு விலகிய பல நடிகைகள் வயதான காலத்தில் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆனால் 87 வயதிலும் செல்வமும் செல்வாக்கும் மிக்க நல்லதொரு வாழ்க்கையை அவர் வாழ்ந்து மறைந்திருக்கிறார்." என்கிறார் சிவகுமார். எம்ஜிஆர் மறைந்து 30 ஆண்டுகளாகிவிட்டாலும் இன்றும் அவருடைய படங்கள் பேசப்படுவது போல, சரோஜா தேவியின் படங்களும் நிலைத்து நிற்கும்." என்கிறார்.

**நன்றி: சேவியர் செல்வகுமார்**

# சின்ன பட்ஜெட் படங்களும்... அதன் அசத்தல் வசூல் விவரமும்...

நல்ல திரைக்கதை கொண்ட படங்களை சினிமா ரசிகர்கள் கொண்டா தவறுவதில்லை. பெரிய பட்ஜெட் படங்களே, சின்ன பட்ஜெட் படங்களோ கதை நல்லா இருக்கா என்பதே ரசிகர்களின் முதல் எதிர்பார்ப்பாக உள்ளது. இந்த ஆண்டின் முதல் பாதியில் வெளியான பெரிய பட்ஜெட் படங்களில் அனைத்தும் தோல் வியை தழுவிய நிலையில் சின்ன பட்ஜெட் படங்கள் மட்டுமே தமிழ் சினிமாவின் மானத்தை காப்பாற்றியது என்றே சொல்லலாம். அந்த வகையில் இந்த ஆண்டில் வெளியான சின்ன பட்ஜெட் படங்களின் வசூல் விபர ங்களை இந்த பதிவில் பார்ப்போம்.




அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் வெளியான ரொமான்டிக், காமெடி திரைப்படம் “டிராகன்“. 36 கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் மொத்தம் 150 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூல் செய்து அசதியுள்ளது.



அதர்வா நடிப்பில் சமீபத்தில் வெளியான சூப்பர் ஹிட் திரைப்படம் “டிஎன்ஏ“. அதர்வாவுக்கு செம கம்பேக் படமாக இது அமைத்தது. தியேட்டரில் ஹிட்டான இப்படம் ஓடிடி தளத்திலும் அமோக வரவேற்பு பெற்று வருகிறது. 6 கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் 9 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூல் செய்து ஹிட் கொடுத் துள்ளது.



சூப்பரான வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து அதில் வெற்றி கண்டவர் நடிகர் மணிகண்டன். இவர் நடிப்பில் இந்த ஆண்டு வெளியான சூப்பர் ஹிட் திரைப்படம் “குடும்பஸ்தன்“. வெறும் 8 கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் 28 கோடி ரூபாய்க்கும் மேல் வசூல் செய்துள்ளது.



காமெடியனாக இருந்து ஹரோவாக ப்ரொமோட் ஆன சூரி, தற்போது தமிழ் சினிமாவின் பிஸி நடிகராக ஜொலி த்து வருகிறார். விடுதலை கொடுத்த மெகா வெற்றியை தொடர்ந்து இவருக்கு அடுத்தடுத்து படங்களில் தேடி வர தொடங்கின. அந்த வகையில் சூரி, ஐஸ்வர்யா லக்ஷ்மி நடிப்பில் வெளியான குடும்ப திரைப்படம் “மாமன்“. 10 கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் 48 கோடி ரூபாய்க்கும் மேல் வசூல் செய்து ஹிட் கொடுத்துள்ளது.



இயக்குநர் அறிவழகன் இயக்கத்தில் ஆதி நடிப்பில் வெளியான ஹாரர், திரில்லர் திரைப்படம் “சப்தம்“. தியே ட்டரில் வெளியாகி அமோக வரவேற்பு பெற்ற இப்படம் 6 கோடி ரூபாய்க்கும் குறைவான பட்ஜெட்டில் எடுக்கப்பட்டது. சின்ன பட்ஜெட் படமாக வெளியாகி ரசிகர்களை ஈர்த்த இப்படம் 10 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூல் செய்து ள்ளதாக கூறுகின்றனர்.



இயக்குநர் ராம் இயக்கத்தில் சிவா நடிப்பில் பெரும் எதிர்பார்ப்புடன் வெளியான திரைப்படம் “பறந்து போ“. ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்த இப்படம் சூப்பரான சூஃபீல் குட் படமாக வெற்றி கண்டுள்ளது. வெறும் 3-4 கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் மொத்தம் 6 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூல் செய்து ஹிட் கொடுத்துள்ளது.



சசிகுமார், சிம்ரன், யோகி பாபு உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான மெகா ஹிட் திரைப்பட “டூரிஸ்ட் சூஃபேமிலி“. இந்த ஆண்டின் சூப்பரான சூஃபீல் குட் திரைப்படத்தை கொடுத்துள்ளார் இயக்குநர் அபிஷன் ஜீவிந்த்.

வெறும் 7 கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் 90 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூல் செய் துள்ளது. பட்ஜெட்டை காட்டிலும் 1200 மடங்கு அதிக லாப த்தை கொடுத்துள்ளது. மேலும் 2025ல் அதிக லாபம் கொடுத்த படமாக நம்பர் ஒன் இடத்தில் உள்ளது.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
கேவலார் மாத கோவிலில்
மலிவு விற்பனை இடம்பெறும்...
அனைவரையும் அழைக்கின்றோம்!!!
" என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! "
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


TRUST Travels
TRUST TRAVELS
Reisebüro
இலங்கை, இந்தியா மற்றும் அனைத்து நாடுகளிற்குமான
பயணச்சீட்டைகள்,
வீசாக்கள் அனைத்தையும்
குறைந்த செலவில் விரைவாகப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்...
TRUST TRAVELS
A9 Road,Kilinochchi,
Srilanka.
+94 776 668 381
trusttravelsffm@gmail.com
TRUST TRAVELS
Mosel str 33
60329 Frankfurt am main
+49 176 45656520
Lufthansa
SriLankan
IndiGo


மருதம் தங்ககம்
HOTEL MARUTHAM
A9 வீதி, கிளிநொச்சி
நகரின் மையத்தில்,
அனைத்து வசதிகளுடன்
புதிய தங்குமிடம்.
+94 212 286 677
+94 776 665 685
Non smoking rooms
Parking
Family rooms
24 Hours front desk
Lift
AC/NON AC
ROOMS
A/C Rooms
Intercom system
Van Hire services
Attached bathrooms
TV


யேர்மனி டோட்முண்ட் நகரில்
KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /


Jaffna SUPER.MARKT
Jaffna Super markt
WELCOME IM Jaffna SUPER.MARKT
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
எம்மிடம் நம்பி வாங்கோ...! சந்தோசமாகப் போங்கோ...!!!
Tel: 0179 2310 560
Lido a Casa
online bestellen auf
www.lidoacasa-ms.de
Wolbecker Str.16a – 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)